இதழ் -19

16.02.2021

பல்சுவை மின்னிதழ்



ஆதலினால் காதல் செய்வீர்

நெற்றிக்கண்

பெருவெள்ளத்திற்கான பயணம்



# தாய்மொழியை காதலியுங்கள்




இப்பரந்த உலகில் இன்று 7117 மொழிகள் நாவினாலும் உதடுகளாலும் அசைக்கப்படுகிறதாகவும், அதேநேரம் ஏறத்தாழ 40மூமான மொழிகள் அருகி வருவதாகவும், அவற்றில் 1000இற்கும் குறைவான மக்களே அம்மொழிகளின் காவிகளாய் இன்று உள்ளதாகவும் ஆய்வுகள் சுட்டி நிற்கின்றது. இது அழியும் 40மூமான தாய்மொழி பேசுபவர்களின் சிந்தனைத்திறனை பூச்சியமாக்க உள்ளது என்பது துயரமான பதிவாகவே காணப்படுகிறது.


இன்றைய உலகமயமாதல் காலச்சூழ்நிலையில் ஆங்கில மொழிக்கான சர்வதேச மொழி மோகத்தில் தாய்மொழியை பழமைவாதமாக, குறுகிய கண்ணோட்டத்துடன் நோக்கப்படுவது பரவலாக அதிகரித்து வருகிறது. அபிவிருத்தியடைந்த நாடுகள் தங்கள் தாய்மொழியினூடான செயற்பாடுகளை அதிகரித்து வருகின்ற போதிலும், தாய்மொழியை புறக்கணித்து உலக மொழிகளை நாகரீக மொழிகளாய் பின்பற்றும் அவலம் ஆசிய நாடுகளிலேயே பரவலாக காணப்படுகிறது. ஆசிய நாடுகளிலும் சீனர்கள் விதிவிலக்கானவர்கள். இன்றும் சீனர்கள் தங்கள் தாய்மொழிக்கு அதிக முன்னுரிமை அளித்து வருகிறார்கள். உலகின் எம்மூலையில் வெளியிடப்படும் அரிய சிந்தனை புத்தகங்களை மிகவிரைவிலேயே தங்களது சீன மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்கிறார்கள். அதுவே மேற்கிடம் நீண்டகாலமாய் பொதிந்த வல்லாதிக்கத்தை ஆசியாவின் பக்கம் இழுக்கும் ஆற்றலை சீனா பெற வழிவகுத்துள்ளது.

தாய்மொழி உதாசினத்தால் ஆசிய நாடுகள் அடைந்துள்ள பின்னடைவை ஆய்ந்துகொள்ள சற்றே ஆசியர்கள் வரலாற்றையும் நிகழ்காலத்தையும் ஒப்பீட்டு ஆராய வேண்டி உள்ளது. உலகத்தோடு தொடர்பற்ற காலங்களில் தத்தமது அடையாளங்களோடு மக்கள் வாழ்ந்த நூற்றாண்டுகளில் ஆசியா முதன்மையான கண்டமாக மிளிர்ந்துள்ளது. சான்றாக, இன்று உலகை ஆளும் முதன்மை மதங்களான கிறிஸ்தவம் (மேற்கு ஆசியா) இஸ்லாம் (மேற்கு ஆசியா) இந்து (தென்னாசியா) ஆகிய மதங்களின் உருவாக்கங்கள் ஆசியாவை மையப்படுத்தியே இடம்பெற்றுள்ளது. தாங்கள் தாய்மொழிகளில் சிந்தித்த காலங்களில் மதங்களையே உருவாக்கிய ஆசியர்கள். இன்று போலி நாகரீக மோகத்தில் தாய்மொழியையும் சிந்தனைகளையும் இழந்து மேற்கின் அடிமைகளாய் உலா வருவது ஆசியாவின் அவலமேயாகும்.

தாய்மொழிகள் பாதுகாக்கப்படுவதோடு அவை அடுத்த தலைமுறைகளுக்கு கடத்தப்பட வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகும்.

காதலர் தினத்துக்கும்(14.02.2021) தாய்மொழி தினத்துக்கும்(21.02.2021) இடையிலே எமது தூமியின் 19ஆவது இதழ் (16.02.2021) வெளிவருகிறது. காதலும் தமிழும் இணைந்த இந்த இனிய நாளில் தூமியின் இணையத்தளமும் புதுப்பொலிவுடன் உத்தியோகபூர்வமாக தொடங்கப்படுகிறது. பல வாசகர்களது வேண்டுகோளுக்கு இணங்க இணையத்தளம் மூலமாகவும் நேரடியாக தூமி மின்னிதழை வாசிக்கக்கூடிய வகையில் வடிவமைத்துள்ளோம். வாசிப்பை இலகுபடுத்தி, வாசிப்புத்திறனை தாய்மொழியில் அதிகரிக்கச் செய்யும் ஒரு முயற்சியே இது. பல புதிய அம்சங்கள் இதில் வர இருக்கின்றன.

***காத்திருங்கள்...***
***எதிர்பார்த்திருங்கள்...***



இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

வடிவமைப்பாளர்கள்
வி. ரிஷிகேசவன்
வ.குணநிதன்

ஆசிரியர்
ச.சந்தோஷன்

www.thumi.org

thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06

திறனாய்வாளர்
க.குகவர்மன்


# இவ்விதழில் துமித்துளை...


04 சிங்ககிரித்தலைவன்

26 ஈர நிலங்களின் மீது ஈரம் வேண்டும்.

06 ஓர் நொடியும் உன்னை நான் பிரிந்தால்...

29 நெற்றிக்கண்

09 அரசு

30 தொடரும் பனிக்காலம்

12 பார்வைகள் பலவிதம்

31 ஈழச் சூழலியல்

14 கர்ப்பகால வாய் ஆரோக்கியம்

34 குறுக்கெழுத்துப் போட்டி

16 ஆதலினால் காதல் செய்வீர்..

35 உலக தாய்மொழி தினம்

19 அட்டைப்படம் சொல்லும் கதை

39 உயிரின் ஓலக்குரல்

21 சித்திராங்கதா

40 IPL இலக்கு அடையப்பட்டதா?

25 திரைத்தமிழ் - ஆதித்ய வர்மா

42 மந்திர மெஸ்ஸி

தெற்கா? வடக்கா?


ஜீவா ஷஜீவனின்

# சிங்ககிரித்தலைவன்

ஆட்சி 19

பொழுது புலர்ந்திருந்தது... அனுராதபுரத்தை விட்டு வெள்ளம் முற்றாக ஓடி வழிந்திருந்தது. ஓயாத மழைக்கு பின்னர் இன்றைக்குத்தான் சூரியனின் கிரணங்கள் பூமியை ஆரத்தழுவிக் கொண்டது... மழை பட்டுக் கழுவிய மரங்கள் எல்லாம் புத்துயிர் பெற்றுப் பூரித்து நின்றன... குளங்களும் குட்டைகளும் நீர் ததும்பி நிறைந்திருந்தன... காலைச் சூரிய ஒளியின் துலங்கலால் நீர்நிலைகளெல்லாம் மின்னி யாலம் செய்தன... குரங்குகளும் மான்களும் கூட்டம் கூட்டமாக புதர்களுக்கு வெளியே வந்து தலை காட்டின... கனத்த மழையிலும் தப்பி வாழ்வதற்கும் அடைக்கலமாவதற்கும் அவற்றுக்கு வழி தெரிந்திருந்தது... இயற்கை வழியமைத்திருந்தது! இந்த இனிய காட்சிகளுக்கு அப்பால், நாட்டின் துயர முகமும் தூலாம்பரமாகத் தெரிந்தது!

வயல்களையெல்லாம் வாரிச்சுருட்டி வெள்ளம் தின்று ஏப்பம் விட்டிருந்தது... குடிசைகளும் குந்து வைத்த வீடுகளும் பாறி விழுந்தும், வெள்ளத்தில்



முற்றாக அடித்துப்போயும் கிராமங்கள் எல்லாம் மைதானங்கள் போலும் ஆகியிருந்தன... இறந்துபோன கால்நடைகளை மக்கள் குழிதோண்டிப் புதைத்துக்கொண்டிருந்தனர்... சிலர் தமது வாழிடங்களை அமைக்கும் முயற்சியை ஆரம்பித்திருந்தனர். காசியப்பனால், படை வீரர்களும் மக்களுக்கு உதவுவதற்காக, குறிப்பாக மக்களிடம் மன்னனுக்காக நற்பெயரை ஏற்படுத்திக்கொள்ள கிராமங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

எவ்வளவு முயற்சி செய்தாலும் அந்தப்பெருவெள்ளம் ஏற்படுத்தியிருந்த அழிவிலிருந்து அனுராதபுரம் தன்னை பழைய நிலைக்கு கொண்டுவர ஓராண்டேனும் ஆகும் என்பதை அனைவரும் உணர்ந்திருந்தனர்! ஆனால் காட்டு விலங்குகளெல்லாம் தம் பழைய வாழ்க்கைக்கு திரும்பியிருந்தன... இயற்கையும் தன் அன்றாட நகர்வுகளை வழமை போல் நகர்த்தத் தொடங்கியிருந்தது!

“பாவம் இந்த மனிதன்தான் காலாகாலமாக இயற்கையைப் பகைத்து, அதன் கோவத்துக்கும் தன்னை ஆளாக்கிக்கொள்கின்றான்... வஞ்சகமும் பொறாமையும் பேராசையும் கொண்ட மனிதனை இயற்கை இப்படி காலத்துக்குக் காலம் தண்டித்து வருவது வழமை... ஆனால் முக்காலமும் அந்தப் போதிமாதவனையே வணங்கி, பௌத்த அறத்தையே கடைப்பிடித்துவரும் தங்களைப் போன்றவர்களையும் ஏன் இந்தக்காலம் இப்படிச் சோதிக்கிறது?”
என்று மகாநாமரைப் பார்த்து ஏக்கத்துடன் கேட்டான் முகலன்!

குகையில் ஒரு உயரமான கல்லில் அமர்ந்திருந்த மகாநாமர் தன் பேரனைப் பார்த்து சிரித்தார்...

“மகனே...சோதனைகள் வருவது எம்மை வருத்துவதற்காக மட்டுமல்ல... புடம் போடுவதற்காயும் தான்! தீயில் இட்ட

சங்கு இன்னும் வெண்மையாவதைப் போல சோதனை சூழ்ந்த மனிதன் தன்னை இன்னும் தகவமைத்துக்கொள்கின்றான்... சோதனைத்தீ எரிகிற போது சருகாக இருப்பதா? சங்காக இருப்பதா? என்று நீ தீர்மானித்து உன் மனதைத் திடப்படுத்திக்கொள்!"

முகத்தில் நம்பிக்கை நிழலாட,

"ஐயனே... தெளிவுப்பெற்றேன்... ஒருவாரமாகத் தலைமறைவாக இருந்துவிட்டோம்... இன்று ஒரு முடிவெடுத்து நாளைய திட்டமிடல்களை செய்வோம்! உங்கள் உத்தரவுக்காக காத்திருக்கின்றோம்!"

என்று வணங்கி நின்றான் முகலன்...

"மகனே... முக்கியமான ஒருவனுக்காய் காத்திருக்கின்றோம்... அவன் வந்ததும்... தெற்கே போவதா வடக்கே போவதா என்ற முடிவுக்கு வந்து விடலாம்..."

என்று கூறி முடிப்பதற்குள் வீரனொருவன் ஓடிவந்து வணங்கினான்...

"அவர்கள் வந்து கொண்டிருக்கின்றார்கள் அமைச்சரே ..."

ஆர்வ மிகுதியால் முகலனும் குகையின் வாசலுக்குச் சென்று பார்த்தான்... தூரத்தில் முகலனின் வீரர்களின் தலைவனோடு நமக்கு இன்னும் அறிமுகமாகாத சீலகாலனும் வந்துகொண்டிருந்தான்... முகலனுக்கு மைத்துணனான சீலகாலன் மகாநாமரோடு சேர்ந்து துறவறம் ஏற்றவன்... மகாநாமர் மீளவும் முதலமைச்சரான போதும் தன் துறவு வாழ்வை நீங்காமல் தொடர்ந்தவன்... புத்தரின் போதனைகளை சிரம் மேல் கொண்டு தன்னை நிலைப்படுத்தியவன்!

("The King's (Mogalaana's) brother-in-law Seelakala> who had feld with him to India!
- L.E.Blaze in his 'A History Of Ceylon')


இன்று மகாநாமரின் வேண்டுதலுக்கு ஏற்ப இங்கு வந்து சேர்ந்திருந்தான்...
முகலன் ஓடிச் சென்று சீலகாலனைத் தழுவிக்கொண்டான்... அவனும் முகலனை அன்போடு அணைத்துக்கொண்டு மகாநாமரிடம் சென்று வணங்கி நின்றான்...

"முகலா... உன் கேள்விகளுக்கு விடையாக சீலகாலன் வந்து சேர்ந்தான்... சீலா... நடந்தவற்றை அறிந்திருப்பாய் ... இனி நடக்கப் போகிறவற்றுக்கு ஒரு வழியை நீயே சொல்ல வேண்டும்!"

"அனைத்துமறிந்த நீங்களே என்னிடம் பொறுப்பை தருவதை எனக்கு வைக்கும் சோதனையாகவே பார்க்கிறேன்... வடக்கே போவது தான் சிறந்தது... பாதுகாப்பும் கூட..."

மகாநாமரும் அதை ஆமோதிப்பதைப்போல தலையசைத்தார்... ஆனால் இந்த முடிவை எடுப்பதற்காக சீலகாலனுக்காக மகாநாமர் காத்திருக்கவில்லை... சீலகாலனையும் அழைத்துச் செல்லவே காத்திருந்ததையும்... மகாநாமரைபோலவே சிந்திக்கும் சீலகாலனும் வடக்கு நோக்கிய பயணத்தை பரிந்துரைத்ததும் முகலனுக்கு விளங்காமல் இல்லை... எல்லாம் தனக்கான எதிர்காலத்துக்கான நகர்வுகளே என்பதையும் அவன் அறிந்திருந்தான்... எதுவும் அவனுக்கு மகிழ்ச்சியே...

*பயணம் தொடங்கியது....*



# ஓர் நொடியும் உன்னை நான் பிரிந்தால்...

இ.தனிஸ்ரன்

நேரம் எட்டரையாகிறது. ஒன்பது மணிக்கு பஸ். பஸ் ஸ்ராண்டிற்கு அழைத்து செல்ல அப்பா தயாராகிறார். படபடப்பு நிறைந்த இவள். காலிலே ஸ்பிரிங் பூட்டி விட்டவள் போல அங்குமிங்குமாய் அலமலத்துக்கொண்டிருக்கிறாள்.
நேரம் நகராதது போலவே இருக்கிறது.

//அஞ்சுக்கும் ஆறுக்குமே இடைவெளி ஏனோ ஏனோ//

முதல்நாள் இரவிலிருந்தே தூக்கம் இல்லாது மனமெல்லாம் குளிர் ஊற, கண் மூடுவதும் முழிப்பதுமாய் எப்படா விடியும் என்று காத்திருந்து அந்த இரவை மூச்சு முட்ட கடந்தவள். மனசெல்லாம் இரவு கொழும்புக்கு போகப்போறன் என்ற எண்ணம். போய்?? அங்கேயே தொங்கிக்கொண்டு அந்தரத்தில் ஊசலாடியது மனசு.

//பால் வடியும் வான் நிலவில் தீ வடிவதேனோ ராவெழுதும் என் கனவில் தேன் வடிவதேனோ//

ஈவினிங்கே தயார்படுத்தி வைத்த பா(b)க்கினை மீண்டும் படபடப்போடு செக் செய்தாள். உடுப்பு, புக்ஸ், பென், ஹிப்ட் எல்லாமே சரியாக இருக்கிறது. ஆனாலும் கொப்பளிக்கும் டோப்பாமைனின் சேட்டையால் அவளுக்கும் நடக்கும் ஆனந்ததாண்டவத்தை கையாள முடியாது தடுமாறுகிறாள்.



"மனமே மனமே
தடுமாறும் மனமே
உள்ளுக்குள் இருந்தே உயிர் கொல்லும் மனமே"

தயாராகி வந்த அப்பா,
"தாரா! வெளிக்கிடுவமா?" என்று கேட்க,
"ஆ ஆ ஓ ஓ ஓம் சரி" என்று வார்த்தைகள் உடைந்து வசனத்தை விழுங்கி தயார் என்றாள்.

//வார்த்தைகள் நாவிலே உடையுதே ஏனோ
மண்ணில் நான் வாழ்வதே மறந்ததே ஏனோ//



"ஏன் இப்ப பதறுறாய்? எல்லாம் படிச்சிட்டாய் தானே? எக்ஸாமெல்லாம் வடிவா செய்யலாம். எங்கையாலும் மண்டை விட்டுட்டு யோசிச்சுக்கொண்டிருக்காம வெளிக்கிடு." இவளது பதற்றத்தை புரிந்து கொண்டு அம்மா அதட்டினாள்.

"மாலை வந்தால் போதும் ஒரு நூற்று பத்தில் தேகம்
செங்காந்தள் போல் காயும்
காற்று வந்து மோதும் உன் கைகள் என்றே தோன்றும்
பின் ஏமாற்றம் தீண்டும்
தவிப்பதை மறைக்கிறேன்
என் பொய்யைப் பூட்டி வைத்துக் கொண்டேன்"

அப்பாவின் மோட்டார் பஸ் ஸ்டாண்டை நோக்கி புறப்பட்டது. அப்பா கேட்டார்,


"லியா பஸ் ஸ்டாண்ட்ல நிக்கிறாளா?"

ரசிக்கும் சீமானே

“அங்க எல்லா இடமும் கொரோனாவாம்! மாஸ்க், சனிட்டைசர் எல்லாம் எடுத்து வச்சனி தானே?”

அப்பாவின் கேள்விக்களுக்கு,
“ம்ம் ம்ம் ஓ ஓ” என்ற படியே, கொரோனாவிடம் பாய்ந்தது மூளை.

“காற்றையும் இடைபுகவிடாதவரிடையே
கை குலுக்கலையே இடை நிறுத்திய
கைங்கரியம் யாரினதோ!
சோல்மேட்டின் தீண்டலை தீதாயும்
சோப்பின் தீண்டலை தோதாயும்
சோடித்த அருஞ்செயல் யாரினதோ!
ஒட்டி உறவாடாது ஒதுங்கி ரசித்த
ஒருதலைக்காதலரை
ஒன்லைன்ல் ஒத்தையில் உழல விட்ட
வில்லத்தனம் யாரினதோ! ”



யாரோ எழுதிய கொரோனோ கவிதை இவளது நிலையையும் சேர்த்தே சொன்னதால், அவளிடம் இன்னும் நினைவில் இருக்கும் வரிகள் இவை. மீட்ட கவிதையோடு மேலும் பல நினைவுகளை தேடி மனம் பறக்க, பஸ் ஸ்டாண்ட் வந்து சேர்ந்தாள். தோழி லியா இவளுக்காக காத்திருக்க, இருவரும் பஸ் ஏறினார்கள்.

“நான் இங்கே நீயும் அங்கே
இந்த தனிமையில் நிமிடங்கள் வருடமானதேனோ
வான் இங்கே நீலம் அங்கே
இந்த உவமைக்கு இருவரும்
விளக்கமானதேனோ”

பஸ்ஸிலிருந்த டிவியில் ரஹ்மான் பாடிக் கொண்டிருந்தார். சீட்டில் உட்கார்ந்த இவள் டிவியை பார்த்தபடியே நினைவுகளுக்குள் மூழ்கினாள்.

இவள் களனி பல்கலைக்கழகத்தின் நான்காம் ஆண்டு மாணவி. தன்னுடைய பட்சில் கற்கும் “தரன்” மேல் பல்கலைக்கழகம்



சென்றதிலிருந்தே தனி ஈர்ப்பு. அவன் என்றால் இவளுக்குள் சந்தோச சிலிர்ப்பு.

“தூக்கத்தில் உளறல் கொண்டேன்
தூறலில் விரும்பி நின்றேன்
தும்மல் வந்தால் உன் நினைவே கொண்டேன்”

என்று,

//கால் விரல் காவியம் எழுதுதே ஏனோ
கண்களும் கண்களும் பொய் சொல்லும்
ஏனோ//

என்ற கேள்விகளுடன் அவனுடன் நட்பாகி நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தது.

“நினைத்தால் நெஞ்சுகுழி இனிக்கும் அது
ஏனோ
சிரித்தால் நெஞ்சுகுழி அடைக்கும் அது ஏனோ
குளிரில் எனக்கொரு புழுக்கம் அது ஏனோ
வெயிலில் எடுக்குது நடுக்கம் அது ஏனோ”

அத்தனை ஏனோக்களும் சேர்ந்து இவளுக்குள் கும்மாளம் அடித்தாலும், இது அது தான் என்பதை இவள் உணர்த்தும், எது தான்?

//காதலென்று கவிகள் சொல்வார்கள் அது
தானோ//

அவன் மறுப்பு சொல்லிவிட்டால்? என்ற பயத்தால், தன்னுள்ளேயே மறைத்து வைத்தாள்.





//நெஞ்சுக்குள் காதல் வந்தால் பெண் நிலவரம் இது தானோ//

மன நிலவரம் கலவரமாகவே இருந்தாலும், அவன் கூடவே இருப்பதால் நாட்கள் சாதாரணமாகவே கடந்தது. திடீரென்று வந்த கொரோனாவும் லொக்டவுனும் அவனிடமிருந்து தூரமாக்கி விட, பிரிவின் வலியில் வெந்து காதல் பிரவாகம் எடுத்தது.

“வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யார்ஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கி வள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே!”

உயர்ந்த பலா மரத்தில் சிறிய காம்பில் தொங்கிக்கொண்டிருக்கும் பலாப்பழம் நாளுக்கு நாள் பெரிதாக, பழத்தின் எடை தாங்காது எந்த நேரத்திலும் காம்பு உடைந்து பழம் விழலாம். அதுபோல, இவள் உள்ளத்தின் காதலானது நாளுக்கு நாள் மிகுந்துகொண்டே செல்வதால் காம்பை போல சிறிய இவளது உயிரும் காதல் பாரத்தில் பிரியலாம். இப்படியாக காதல் மடை உடைத்த நிலையில், அவனிடம் தன் காதலை ஒப்பித்தாள்.



“நான் நானா கேட்டேன் என்னை நானே
நான் நீயா நெஞ்சம் சொன்னதே
முன்பே வா”

அவனும் இவளை போலவே தன் காதலை ஒளித்து வைத்திருந்தவன். இவள் உருக, அவன் ஏந்தினான். காதல் வாட்ஸ்அப்பிலும் சூமிலும் வளர்ந்தது.

“நிழல் போல விடாமல் உன்னை தொடர்வேனடி
புகைப்போல படாமல் பட்டு நகர்வேனடி
வினா நூறு கனாவும் நூறு விடை சொல்லடி”
என்று கேட்க,

//நான் என்பதில் இன் மறைந்து இம் வந்ததும் ஏனோ
போ என்பதில் போ ஒழிந்து வா வந்ததும் ஏனோ//
ஈருடல் - ஓருயிர் ஆனார்கள்.



இப்படியாக பிரிவிலே காதல் வளர்த்தவர்களுக்கு பல்கலைக்கழகம் பரீட்சைக்கு அழைக்க, பரீட்சை பயத்துக்கு மேலாக, இவ்வளவு நாளும் நண்பன் என்ற யாரோ ஒருவனாக பார்த்தவனை இப்பொழுது தன்னவனாக தன் தலைவனை பார்க்க போகிறோம் என்ற பயமும் சந்தோசமும் கலந்த ஏக்கம் தான் இவளது தவிப்பு - படபடப்பு.

“பகல் நேரம் கனாக்கள் கண்டேன் உறங்காமலே
உயிர் இரண்டும் உராயக்கண்டேன் நெருங்காமலே
உனையன்றி எனக்கு ஏது எதிர்காலமே”

நாளை எதிர்காலத்தை முதன் முதலாய் சந்திக்கும் போது, வெட்கம் இவளை நனைக்குமா இல்லை கண்ணீர் இவளை நனைக்குமா இல்லை முத்தம் தான் இவளை நனைக்குமா??

# அரசு

## ஓர் அறிமுகம் - 02

சிட்ஜ்விக் கருத்துப்படி "அரசு என்பது, அரசாங்க வடிவில் தனி மனிதர்கள் அல்லது சங்கங்கள் இணைவது ஆகும். ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் மீது அவர்கள் ஒன்றிணைவது தங்களை அரசியல் ரீதியாக அமைத்துக் கொள்வது அரசு ஆகும்".

"அரசு என்பது ஒரு மக்கள் கூட்டம் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் வசிப்பதாகும். அவர்கள் வெளி சக்திகளுக்கு கட்டுப்படாமல், ஒரு முறையான அரசாங்கத்தை பெற்று தங்களுக்குள் ஏற்பட்ட இயல்பான கீழ்ப்படிதலை அரசுக்குச் செலுத்துகிறார்கள்" என கார்னர் விளக்குகிறார்.

பேராசிரியர் லாஸ்கி அரசு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார். "ஒரு நிலப்பரப்புக்கு உட்பட்ட சமுதாயமானது அரசாங்கம் என்றும், குடிமக்கள் என்றும் இரு வேறாக வகுக்கப்பட்டுள்ளது. அவர்களின் உறவுமுறை அரசினுடைய நிர்பந்திக்கும் அதிகாரத்தின் மூலமாக தீர்மானிக்கப்படுகிறது"

அரசின் கூறுகள்

அரசின் கூறுகளாக பின்வருவன காணப்படுகின்றன.

1.மக்கள் தொகை
2.நிலப்பகுதி
3.அரசாங்கம்
4.இறையாண்மை

கடந்த இதழில் முதல் இரண்டு கூறுகள் பற்றி அலசி ஆராய்ந்திருந்தோம்.

### அரசாங்கம்:

அரசாங்கம் அரசின் மூன்றாவது கூறாகும். அரசாங்கம் இல்லாமல் அரசு கிடையாது. அரசாங்கம், அரசின் ஆக்கக் கூறுகளில் ஒன்று. அரசு என்னும் கப்பலை ஓட்டிச் செல்லும் மாலுமியாக அரசாங்கம் விளங்குகின்றது.



# சட்டத்தின் சாரல் 2

அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

### இறையாண்மை :

இறையாண்மை அரசின் நான்காவது கூறாகும். இறையாண்மை என்பது உயர்ந்த மற்றும் தலையாய அதிகாரம் ஆகும். அரசின் இறையாண்மை அதிகாரம், சட்டங்களின் வாயிலாக வெளிப்படுத்தப்படுகிறது.

நவீன அரசுகள் தோன்றும்போது அதனுடன் இறையாண்மைக் கருத்தும் உருவாக்கப்பட்டது. இறையாண்மை என்ற சொல் (Sovereignty) லத்தீன் மொழிச் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். அதற்கு உயர்ந்த அதிகாரம் என்று பொருள்.

இறையாண்மை தன்மை என்பது:-

1. உள் இறையாண்மை

2. வெளி இறையாண்மை

என இரண்டு வகைப்படும்.

உள் இறையாண்மை என்பதற்கு அரசு தனது எல்லைக்குள் உள்ள குடிமக்கள் மற்றும் சங்கங்கள் மேல் தலைமையான அதிகாரத்தை செலுத்தவல்ல அதிகாரமுடையதென பொருள்.

வெளி இறையாண்மை என்பது தன் அதிகார எல்லைக்கு வெளியேயுள்ள யாரும் தன்னை கட்டுப்படுத்த முடியாத சுதந்திரமுடையது என பொருள்.

**ஹெரால்ட் லாஸ்கி கருத்துப்படி, அரசு இறையாண்மை உடையதாய் இருப்பதால்தான் மற்ற சமுதாய அதிகாரம் மற்றும் மனித சங்கங்களிலிருந்து வேறுபடுகிறது.**

## அரசு மற்றும் சமுதாயம்

சமுதாயம் என்பது தன்னுள், தனிநபர்கள், குடும்பங்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

அரசியல் சிந்தனையாளர்கள் அரசு மற்றும் சமுதாயம் ஆகிய இரண்டும் ஒன்றே என்றனர். அரசு என்பது சமுதாயத்தின் பகுதி யாகும் எனினும் அது சமுதாயத்தின் உருவமாகி விடாது.

அரசுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள வேறுபாடுகள்:

1. சமுதாயம் தோன்றிய பின்னரே அரசு என்ற அமைப்பு உருவானது. சமுதாயமானது அரசு தோன்றுவதற்கு முன்னரே தோன்றியது.

2. அரசின் எல்லை வரையறைக்குட்பட்டது. சமுதாயத்தின் வரையறை பெரியது.

3. அரசினுடைய நிலப்பரப்பு இறுதியானது. சமுதாயத்திற்கு எல்லைப்பரப்பு இல்லை.

4. அரசு என்பது அரசியல் நிறுவனமாகும். சமுதாயம் என்பது ஒரு சமூக நிறுவனமாகும்.

5. அரசுக்கு சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் உள்ளது. சமுதாயத்திற்கு அத்தகைய அதிகாரங்கள் எதுவும் இல்லை.

பேராசிரியர் பார்க்கர் “சமூக மற்றும் அரசியல் கோட்பாடுகளின் அடிப்படைகள்” என்ற நூலில் அரசு, மற்றும் சமுதாயம் ஆகியவற்றிற்கு இடையேயுள்ள வேறுபாடுகளை பின்வரும் மூன்று அடிப்படைகளில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். அவை,

1. நோக்கம் அல்லது பணி
2. நிறுவனம் மற்றும் கட்டமைப்பு
3. வழிமுறை

நோக்கம் என்ற அடிப்படையில் அரசு என்பது சட்டரீதியான ஒரு சங்கமாகும். சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கு தரமான ஒரு அமைப்பை உருவாக்கி அதனை செயல்படுத்துவதே அரசின் ஒரே நோக்கமாகும்.

ஆனால் சமுதாயம் என்பது பலவகைப்பட்ட சங்கங்களை உள்ளடக்கியது ஆகும். பல்வேறு சட்டம் சாராத நோக்கங்களையும் கொண்டதாகும்.

சமுதாயத்தின் பல்வேறு நோக்கங்கள் பின்வருவன ஆகும்.

1. அறிவு சார்ந்தது
2. நெறிமுறை சார்ந்தது
3. சமயம் சார்ந்தது
4. பொருளாதாரம் சார்ந்தது
5. நுண்கலை சார்ந்தது
6. பொழுது போக்கு சார்ந்தது.

அரசு மற்றும் சமுதாயத்தின் உறுப்பினர் தன்மை ஒன்றேயாகும். ஆனால் நோக்கங்களில் இரண்டும் மாறுபடுகின்றன. அரசு என்பது மிகப் பெரிய ஆனால் ஒரே ஒரு நோக்கத்திற்காக உள்ளது. சமுதாயம் என்பதோ சில பெரிய நோக்கங்களுக்காகவும், சில சிறிய நோக்கங்களுக்காகவும் உள்ளது. சமுதாயத்தின் நோக்கங்கள் ஆழமானதாகவும், பரந்ததாகவும் காணப்படுகின்றன.

அமைப்பு ரீதியாக பார்க்கும்போது அரசு என்பது சட்டம் சார்ந்த ஒற்றை அமைப்பாகும். ஆனால் சமுதாயம் என்பது பல அமைப்புகளை உள்ளடக்கியது. நிறுவனம் என்ற அடிப்படையில் பார்க்கும் போது அரசிற்கு கட்டாய கீழ்ப்படிதலை பெறும் அதிகாரம் உள்ளது. கட்டாயப் படுத்துவதற்கும், நிர்பந்திப்பதற்கும் அரசிற்கு அதிகாரம் உள்ளது.

ஆனால் சமுதாயம் மனமுவந்த கீழ்படிதலையே முறையாகக் கொண்டுள்ளது. சமுதாயத்தின் பல்வேறு நோக்கங்கள், ஊக்கமளித்து, இசைவை பெறுவதற்கு வகை செய்கிறது. சமுதாயத்தில் பல்வேறு அமைப்புகள் இருப்பதால் ஒரு அமைப்பிலிருந்து விடுபட்டு, வேறு அமைப்பினுள் இணைவதற்கு வாய்ப்புள்ளது.

## அரசு மற்றும் தேசம்

ஆங்கிலத்தில் ‘Nation’ என்ற சொல் நேஷியோ (Natio) என்ற லத்தீன் மொழிச்சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். அதன் பொருள் பிறப்பு அல்லது இனம் ஆகும். தேசம் என்பதும் அரசு என்பதும் ஒரே பொருளில் சில நேரங்களில் பயன்படுத்தப்படுகிறது.

**ஆனால் அவை இரண்டும் வெவ்வேறானவை ஆகும். லீக்காக் என்னும் அறிஞரின் கருத்துப்படி ஒரே வம்சம் மற்றும் மொழி சார்ந்த மக்கள் ஒன்றிணையது ஒரு அமைப்பை உருவாக்குவது தேசம் ஆகும்.**

தேசம் மற்றும் அரசிற்கு இடையிலான வேறுபாடுகளை பின்வருமாறு அறியலாம்.

1. அரசு என்பது பண்டைய காலத்திலேயே இருந்ததாகும். ஆனால் தேசம் என்பது தற்காலத்தில் உருவாக்கப்பட்ட கருத்தாகும்.

2. அரசானது சட்டம் மற்றும் அரசியல் தன்மை உடையதாகும் ஆனால் தேசம் என்பது இனம் மற்றும் கலாசாரம் சார்ந்ததாகும்.

3. வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் மக்களால் சட்டத்திற்கு உட்பட்டு அமைக்கப்பட்டதாகும்.

மக்கள் உளரீதியாக இணைந்து ஒன்றாக வாழ வேண்டும் என்ற விருப்பத்துடன் உருவாக்கப்பட்டதாகும்.

4. அரசு இறைமை உடையதாக இருக்க வேண்டும் இறைமை இல்லை என்றாலும் மக்கள் ஒரே தேசத்தை சார்ந்தவர்களாக தொடர்ந்து வாழ்கின்றனர்.


5. அரசில் பலதரப்பட்ட மக்கள் வசிக்கிறார்கள் ஆனால் தேசம் என்பது ஒரே வகைப்பட்ட மக்களை கொண்டதாகும்.


இரண்டாம் உலகப் போருக்கு பிறகு (1939-1945) ஒரு தேசம், ஒரு அரசு என்ற கோட்பாடு செயல்பட்டு வருகிறது.

**அந்த வகையில் புதிய அரசுகள் தோன்றும்போது தேச அரசுகளாக உருவாகின்றன. சுய அரசாங்கம் கொண்ட ஒரு தேசம் விடுதலை அடையும் போது ஒரு தேச அரசாக தோன்றுகிறது.**

இந்த பத்தி தினமணியில் வெளிவந்த அரசின் கூறுகள் கட்டுரையினை தழுவி இலங்கைக்கு ஏற்ற வகையில் எழுதப்பட்டுள்ளது.

*சாரல் தூறும்..............................!!!!!*






# பார்வைகள் பலவிதம்

நீ அடையாத
இன்பங்களை
தருவேனா தெரியாது...
நீ கண்ட கனவுகளை
நனவாக்குவேனா
தெரியாது...
ஆனால்!!!
ஒன்று மட்டும் தெரியும்...
நீ நீயாக இருப்பாய்!!!
நம்பி வா..
நமக்கான வாழ்வில்,
உனக்குரியவர்களும்
உடனிருப்பர்!!!

மொழியருவி

அச்சத்தில் அல்ல,
நாணத்தில் அல்ல,
அவன் கேட்ட
போதெல்லாம்
என் கை தர மறுத்தது...
உலகம் பார்க்க,
உலகம் ஏற்க,
அவன் என் கரம்
பற்ற வேண்டும்!!!
அதற்காகத்தான்
அன்று மறுத்தேன்!
அதை அவனும்
அறிவான்!

கண்ணம்மா

நான் பிரிந்து வந்த நேரம்

யாரேனும் பார்த்துவிடப்போகிறார்கள்
என்று பயந்து விலகிப் போகும் நீ
அன்று ஆயிரம் பேர் அருகிலிருந்தும்
என் கைகளை இறுக்கிப் பிடித்துக்
கொண்டாய்
அட ! அதுதான் பிரிவின் வலியா?

ஏதேதோ சொல்லவேண்டும் என்று
நினைத்து வார்த்தைகளின்றி
தவித்தாய்.
பரவாயில்லை.
நீ சொல்ல நினைத்ததை எல்லாம்
உன் விரல்கள் என்னிடம்
சொல்லிக்கொண்டிருந்தன

உன் ஒட்டுமொத்த காதலையும்
உன் கைகள் வழியே நான்
உணரந்து கொண்டிருந்தேன்.

என்னிடமிருந்தும் ஏதோ பதில் வர
வேண்டும் என எதிர்பார்த்தாய்
நானும் எத்தனையோ முறை
சொல்லிவிட்டேன்
உனக்கு ஏதாவது புரிந்ததா?

காதலிப்பதைத் தவிர, வேறு எந்த
வகையிலும் என் காதலை என்னால்
விளக்கவே முடியாது!

இராவி நவிலன்

அவன் கை பிடித்து நடக்கும்
போதெல்லாம் ஒரு தைரியம் வருகிறது.
இரவோ, பகலோ, கூட்டமோ, தனிமையோ அந்த
நம்பிக்கையை அவன் கரங்களால் மட்டுமே
இன்றுவரை தர முடிகிறது.

வினோ

அன்று...
நம்பி கை தந்ததில்லை - அவள்
நாணம் தடுத்திருக்கும்!
நம்பிக்கை தந்ததில்லை - அவள்
சோகம் தடுத்திருக்கும்!
இன்று...
நம்பி கை தந்துவிட்டாள் - அதை
இறுக பற்றிக் கொண்டேன்!
நம்பிக்கை தந்துவிட்டாள் - அதை
கொண்டாடத் தொடங்கிவிட்டேன்!

இனியவன்



அப்பா கைபிடிக்க நடந்தேன்!!
அண்ணன் கையால் வாகனம் ஓட்டினேன்!!
ஆசான் கைபிடிக்க எழுதினேன்!!
உந்தன் கைபிடிக்க திரும்பவும் பிறக்கிறேன்!!

சந்திரனார்.

பெரிய மதில் எழுப்பி
அதைச்சூழ அகழி வெட்டி
முதலைகள், பாம்புகள் என
அத்தனைக்கும்
அகழியை புகலிடமாக்கி,
திறப்பே இல்லாத பூட்டால்
திறக்கவே முடியாத கதவை பூட்டி
அதற்குள்ளும் அங்குலத்திற்கொரு
அரக்கரை காவல் போட்டு
அன்பே உன்னை
அடைத்து வைத்தாலும்
அத்தனையும் உடைத்து உன்னை
கரம் பிடிப்பேன் - இது
காதல் மீது சத்தியம்!

சசி

இன்றைய,
இதம் தரும் இணைய யுகத்தில்
இன்பமற்று...
இனிய காதல் எண்ணத்தில்
இரு கரம் கோர்த்தேன்... என்
இனிய காதலனுடன்!
இணைந்தேன் இல்லறத்தில்!
இளைப்பாறினேன் இனியவன் தோளில்!
இன்றும் இவன் தோளிலே...
இன்பமயமாய் இரு கரம் கோர்த்து
இனியவனுடன் இனியவள்!

இவள் வரைபி.

## அடுத்த இதழுக்கான சிந்தனை...



நயனி

இந்த படத்திற்கான உங்கள் பார்வையை உலகம் பார்க்கச் செய்ய எழுத்துக்களாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்

thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06


## உங்களுக்கு மாதவிடாய் வலி ஏற்படும் அபாயம் உள்ளதா?


பின்வருவன அதற்கான ஆபத்தை அதிகரிக்கிறது.

- இளைய வயதில் பருவமடைதல்
- அல்லது அதற்கு மேற்பட்ட வயதில் பருவமடைதல்
- மாதவிடாய் காலங்களில் அதிகளவான இரத்தப்போக்கு
- ஒழுங்கற்ற மாதவிடாய்
- கடுமையான மாதவிடாய் உள்ள பரம்பரையில் பிறந்தவர்



GOLDEN Z club
Faculty of Medicine, Colombo
ZONTA
CLUB 1 OF COLOMBO

# கர்ப்பகாலத்தில் வாய் ஆரோக்கியம்




கர்ப்பிணிகளுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பற்களை, தாயாகப் போகிறவர்கள் கருவறையில் இருக்கும் சிசுவின் நலம் கருதி, வாய் மற்றும் பற்சுகாதாரத்தினை காப்பது மிகவும் அவசியம்.

## கர்ப்பகாலத்தில் சிறந்த வாய் ஆரோக்கியத்தை பேணுவது ஏன் முக்கியமானது?

-கர்ப்ப காலத்தில் பல நோய்களினால் உருவாகும் சிக்கல்களை குறைக்க சிறுவரிடையே பற்சூத்தை அபாயத்தை குறைக்க (தீய பக்றீரியாக்கள் தாயிடம் இருந்து பிறந்த சிசுவிற்குதொற்றும் அபாயத்தை குறைப்பதற்கு)

-பற்சூத்தையுள்ள தாய்மாருக்கு பிறப்பு நிறை குறைந்த பிள்ளைகள் பிறப்பது ஆய்வு மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

-கர்ப்பிணிகளுக்கு ஈறு நோய் வரலாம். அதனால் பற்களை சுற்றி இருக்கும் ஈறு வலுவிழந்து காணப்படுகிறது. அதனால் ஈறுகளில் வீக்கம், வாய் துர்நாற்றம், பற்களில் கூச்சம் ஏற்படலாம்.



-பற்சூத்தை உள்ள கர்ப்பவதிக்கு பற்சிதைவு அபாயமும் முன்கூட்டிய பிரசவங்களும் **(Premature Delivery)** இடம்பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளது.

## கர்ப்பிணிகள் வாய் நோய்களுக்கு அதிக வாய்ப்புள்ளவர்களாக இருப்பது ஏன்?

-உடலில் ஓமோன்களில் ஏற்படும் மாற்றம் காரணமாக முரசு நோயினால் பாதிக்கபட வாய்ப்புண்டு. (குருதி வெளியேறுகின்ற வீங்கிய முரசு)

-கர்ப்பகாலத்தில் அடிக்கடி சத்தி எடுப்பதால் இரைப்பையிலுள்ள அமிலம் சத்தியுடன் வெளியேறி பற்களை அடிக்கடி தாக்குவதாலும் கர்ப்ப காலத்தில் உணவு விருப்புக்கள் மாறுவதன் காரணமாக இனிப்பு, புளிப்பு



உணவுகளை அதிகம் எடுப்பதாலும் பல் மிளிரி அரிப்புக்குள்ளாகும்.(வாயினுள் அமிலச் சூழல் ஏற்படுத்துவதன் மூலம்)


-அடிக்கடி உணவு உண்பதாலும் ஓங்காளம் அல்லது சத்தியால் பல்துலக்குவதில் ஏற்படும் சிரமத்தாலும் பற் சுகாதாரம் பாதிக்கப்பட்டு பற்களுக்கிடையே உணவு தேக்கம் அடைவதாலும் பல் நோய்கள் துரிதமாக உருவாகும்.

பற்கள் பாதிக்கப்படும் அபாயத்தை எவ்வாறு குறைத்துக்கொள்வது?

-நிறையுணவை உண்ணுங்கள். அமில இனிப்பு உணவுகளை உண்பதைக் கட்டுப்படுத்துங்கள்.

-முடியுமான வேளைகளில் உணவை உண்ட பின் சிறிதளவாவது நீரை அருந்துவதுடன் வாந்தியின் பின் வாயைக் கழுவுங்கள். எந்த உணவு உட்கொண்டாலும் உடனுக்குடன் வாயை கொப்பளிக்க வேண்டும். வாய் கொப்பளிக்க முடியாத சமயத்தில், குடிக்கும் நீரையே கொப்பளித்தாற் போல் செய்து உட்கொள்ள வேண்டும்.

-தினமும் இரு தடவைகளாவது (காலை, இரவு நித்திரைக்கு முன்) புளோரைட் உள்ள பற்பசையால் பற்தூரிகை கொண்டு முறையாக பல் துலக்குங்கள்.





-பல் மருத்துவரிடம் கட்டாயம் பரிசோதனை செய்து அவர் விதந்துரைத்த சிகிச்சை முறைகளையும் ஆலோசனைகளையும் கடைப்பிடியுங்கள்.

-பற்சூத்தையிருப்பதால் அப்பல்லைப் பிடுங்க வேண்டும் என பல்வைத்தியர் சிபாரிசு செய்தால் அவற்றை பிடுங்கிக் கொள்ள வேண்டும். பலரும் நம்புவது போல கர்ப்பகாலத்தில் சூத்தைப்பற்களைப் பிடுங்குவதால் எந்த ஆபத்தும் ஏற்படாது. சூத்தைப் பல்லை பிடுங்காது வைத்திருப்பதே ஆபத்தானது.

-பச்சை காய்கறிகள் மற்றும் பழங்களை உட்கொண்டால் தேவையான சத்துகள் உடலில் சேர்வதுடன் வாய் மற்றும் பல் சுகாதாரம் மேம்படும்.

பல்லில் சிறு தொல்லையானாலும் உடனுக்குடன் பல் மருத்துவரை அணுகுவதால் வலியற்ற பராமரிப்பிற்கு வழி வகுக்கும்.

ஆகையால் கர்ப்பிணிப் பெண்கள் ஆரோக்கியமான வாய் மற்றும் பல் சுகாதாரத்தை பாதுகாத்து, ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டும்.

“பல்லு போனால் சொல்லு போச்சு“

*சஜீவன் சத்தியசீலன்*
*பல் மருத்துவ பீடம்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

தொண்டரடிப்பொடியன்

# ஆதலினால் காதல் செய்வீர்!

கப்பச்சினோ கதைகள்



காதலிக்கப்போகிறவர்களே! காதலித்துக்கொண்டு இருப்பவர்களே! காதலை தவறாய் அர்த்தப்படுத்திக் கொண்டவர்களே! (இந்த மூன்று வகைக்குள்ளும் முழு மனித இனத்தையும் அடக்கியாகி விட்டது. எப்படி என்பதை அறிய அடி வரை வாருங்கள்) உங்களுடன் நிறையவே கதைக்க வேண்டுமென்று நெடுநாளாய் காத்திருந்தேன். கதைப்போமா?

காதலைப்பற்றி கதைக்க உனக்கு என்ன அருகதை என்று நினைக்கிறீர்களா? என்னைப்பற்றி நான் கதைக்க கூடாதா? ஆம்! காதலைப்பற்றி காதலே கதைக்கப்போகிறேன். போலி நுரைகளை புறந்தள்ளி, தித்திப்பான இந்த காதலின் கப்பச்சினோவை பருகத் தயாராகுங்கள்.

## காதலிக்கப்போகிறவர்களே!

எதற்காக காதலிக்கப்போகிறீர்கள்? எல்லோரும் காதலிக்கிறார்கள் என்று காதலிக்கப்போகிறீர்களா? பொழுது போக்கிற்காக காதலிக்கப்போகிறீர்களா? அப்படியாயின் தயவு செய்து காதலிக்காதீர்கள். காதலிக்க வேண்டுமென்று பழகாதீர்கள். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாதவரை காதல் கொள்ளாதீர்கள். எந்த சந்தர்ப்பத்திலும் உங்கள் காதலையும் காதலித்தவரையும் கைவிடக்கூடாதென்கிற வைராக்கியம் இல்லையா? காதலே வேண்டாம் உங்களுக்கு..

அப்படியென்றால் காதல் என்பது அவ்வளவு க்'டமா? இல்லை. அதை கஸ்டமென்று நினைத்தால் காதலிக்காதீர்கள். சிலையாக முடிவெடுத்துவிட்ட கல் ஆனது உளிகள் தரும் வேதனையை வெறுத்துவிடுவதில்லை.

கண்டதும் காதல் என்பது சினிமாவுக்கானது. 3 மணி நேரத்தில் முடித்தாக வேண்டிய படத்தில் 3 நிமிடத்திலேயே காதல் வரும். ஆனால் நிஜ வாழ்க்கைக்கு அது எல்லோருக்கும் சரி வந்து விடுவதில்லை. ஒரு மரம் கனி தருவதற்கு மரமாய் காத்திருக்க வேண்டி இருக்கிறது, பூவாய் பின் காயாய் என பொறுமையோடு காத்திருந்து தக்க காலத்தில் கனி ஆகிறது. அதே போலத்தான் காதலும்.

காத்திருக்க வேண்டும். உங்களுக்கு உரியவரை காணும் வரை காத்திருக்க வேண்டும். அவர் உங்கள் காதலை ஏற்கும் வரை காத்திருக்க வேண்டும். திருமணத்தில் அக்காதல் இணையும் வரை காத்திருக்க வேண்டும். காத்திருப்பின் சுகத்தை காதலில் அறியலாம். ஆனால் தக்க சமயத்தில் கனியாவதை உறுதிப்படுத்தி, அதை பறிக்காவிடின் பழம் அதிகமாக கனிந்து அழுகி விடும். அது போல காதலையும் தக்க சமயத்தில் கைகூடச்செய்து விட வேண்டும்.

## காதலித்துக்கொண்டு இருப்பவர்களே!

காதலால் நீங்கள் அடைந்த இன்பங்கள் மற்றும் பயன்கள் ஏராளம். ஆனால் திருப்பி அந்த காதலுக்கு என்ன பிரதி உபகாரம் செய்தீர்கள்? ஆம். எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும் நீங்கள். நான் இழந்து விட்ட புனிதத்தை மீளப்பெற்றுத்தாருங்கள். காதல் என்றால் கெட்ட பழக்கம் என்ற நம்பிக்கையோடு உள்ள மக்கள் கூட்டத்திற்கு மத்தியில்தான் நீங்கள் காதலித்துக்கொண்டிருக்கிறீர்கள். சல்வார் போனால் தாவணி உள்ளது என்பது காதல் அல்ல என்று சொல்லிக்கொடுங்கள். காதல் ஒருமுறை தான் வரும் என சொல்லிக்கொடுங்கள். அம்மா போல, அப்பா போல காதலனோ, காதலியோ ஒன்றுதான் என்று வாழ்ந்து காட்டுங்கள்.

கஸ்டங்கள், கண்ணீர்கள் காணாத காதல் அதன் ஆழத்தை காண்பது கடினம். அவனோடோ, அவளோடோ கதைக்க முடியாத, சந்திக்க முடியாத சந்தர்ப்பம் உருவாகலாம். அது நாட்களாக, மாதங்களாக, வருடங்களாக



நீளலாம். அந்த காலங்கள் உங்கள் காதலின் ஆழத்தை உங்களுக்கும், உங்களை சார்ந்தவர்களுக்கும் புரிய வைக்கும் காலங்கள். காதலின் பசுமையான நினைவுகளோடும் , காதலின் எதிர்கால கனவுகளோடும் அந்த காலத்தை கடந்து விட்டீர்கள் என்றால் இன்பங்களை அறுவடை செய்ய ஆரம்பிப்பீர்கள். அவசரப்பட்டு தற்கொலை என்ற முடிவுக்கு மட்டும் போய்விடாதீர்கள். தற்கொலை செய்யுமளவிற்கு தைரியம் இருந்தால், அந்த தைரியத்தை வைத்து, எதிர்த்து போராடி, உங்கள் காதலிலும் வாழ்க்கையிலும் வெற்றியடைய பாருங்கள். காதலுக்காக சாகவும் கூடாது. காதலிக்காமல் சாகவும் கூடாது.

சில அதிர்ஸ்டசாலிகள் தவிர பலருக்கு காதலுக்கான அங்கீகாரம் அவர்கள் பெற்றோரிடத்தில் அவ்வளவு இலகுவாக கிடைத்துவிடுவதில்லை. இதனால் காணாமல்ப்போன காதல் கதைகள் நிறைய உண்டு. பெற்றோரை எதிர்த்து திருமணம் செய்வது காதலின் வெற்றியல்ல. உங்கள் காதலின் ஆழத்தை உங்களை பெற்று வளர்த்த பெற்றோருக்கு புரியவைக்க இருவரும் இணைந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு முயற்சி செய்யுங்கள். எறும்பு ஊரக் கல்லும் நகரும். காதலின் ஆழமா? பெற்றோரின் பாசமா? என்று ஒருபோதும் ஒப்பிடாதீர்கள். இரண்டுமே ஒப்பிடமுடியாத இரு உன்னதமான உணர்வுகள். காதலுக்காக பெற்றவர்களையோ, பெற்றவர்களுக்காக காதலையோ கைவிட்டுவிடக்கூடாது.

காதல் திருமணத்தில் கைகூடியவர்களே! உண்மையில் நீங்கள் எவ்வளவு அதிர்'டசாலிகள் என்று திருமணத்தில் இணைவதற்காக போராடும் காதலர்களை கேட்டால் சொல்வார்கள். காதலில் வெற்றி அடைந்த நீங்கள் வாழ்க்கையிலும் வெற்றியடைய வேண்டும். அப்போதுதான் காதல் மீதான நம்பிக்கை பெற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வரும். திருமணத்திற்கு முதல் எவ்வாறு இருந்தீர்களோ திருமணத்திற்கு பிறகும் அவ்வாறே இருக்க முயலுங்கள். இயன்றவரை என்றெல்லாம் கூற மாட்டேன் கட்டாயம் உங்கள் துணையிடம் வெளிப்படையாக இருங்கள். குழந்தை வரலாம், வேலைப்பழுக்கள் அதிகமாகலாம். ஆனால் உங்கள் இருவருக்குமிடையிலான அந்நியோன்னியமும், காதலும், நம்பிக்கையும் என்றுமே மாறாமல் இருக்க வேண்டும். உங்கள் காதல் வெற்றியடைந்த கையோடு காதலின் தேவை முடிந்ததாக நினைத்து விடாதீர்கள். கட்டையில் வேகும் வரை காதல்த்தீயை அணையாமல் பார்த்துக்கொள்ளுங்கள். காதலில் வெற்றியடைந்தவர்களின் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக இருப்பதை இந்த சமூகம் அடிக்கடி அவதானிக்குமானால் காதல் செய்யச்சொல்லி அதுவே சொல்லும் காலமும் வரும்.

## காதலை தவறாய் அர்த்தப்படுத்திக்கொண்டவர்களே!

காதல் என்றால் என்னவென்றே தெரியாமல் பலர் காதல் செய்வதாக சொல்பவர்களும் காதலின் மேன்மையையும், மகத்துவத்தையும் உணராமல் அதை எதிர்க்கும் இந்த சமூகத்தினரும் என இரு தரப்பினருமே இந்த வகைக்குள் வருவார்கள்.

எதிர்ப்பால் கவர்ச்சியாலும், வயதுத் தூண்டுதலாலும் ஏற்படுவது காதலே அல்ல என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். ஒருவரிடம் உங்கள் இதயத்தை பறிகொடுத்து விட்டால் இன்னொருவரிடம் நிச்சயமாக உங்களை இழக்க மனமே வராது. ஆனால் இங்கே மாதத்திற்கு ஒருவரை மாற்றுவதையும் காதல் என்கிறார்கள்.





“அவள் எங்கே விட்டுப்போனாளோ அங்கே இருந்து உனை நான் காதல் செய்தேனே”

என்பதெல்லாம் காதல் அல்ல. அவள்(ன்) விட்டுச்சென்று விட்டால் அந்த இடத்தை நிரப்ப எவளா(னா)லும் எப்போதும் முடியாது. இந்த சத்தியம் எல்லோருக்கும் புரிய வேண்டும். ஒரு முறைதான் அது பூக்க முடியும். அதை வாடிவிடாமல் காப்பது உங்கள் கெட்டித்தனம். உடல் இச்சைகளை ஈடேற்றிக்கொள்ளவும் காதலை பாலமாக பயன்படுத்துகிறார்கள். இவற்றுக்கெல்லாம் வேறு பெயர் வைத்துவிடுங்கள். காதல் என்று சொல்லி களங்கப்படுத்தி விடாதீர்கள்.

ஒருதலைக்காதலை இருதலைக்காதலாக மாற்ற பிரயத்தனம் எடுப்பவர்களே.. இரு மனமும் இணைந்தால்த்தான் காதல். உங்களுக்கு காதல் வந்து விட்டது என்பதற்காக நீங்கள் காதலிப்பவருக்கும் வரவேண்டுமென்று எந்த கட்டாயமும் இல்லை. கட்டாய திருமணம் எந்தளவு தவறோ, கட்டாய காதலும் தவறானது. உங்கள் காதலை தெரியப்படுத்தலாம். காத்திருக்கலாம். ஆனால் கட்டாயப்படுத்தி மூர்க்கத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. உங்கள் காதல் உண்மை என்றால் அது நீங்கள் காதலிப்பவரை க்'டப்படுத்திப்பார்க்க உங்களை அனுமதிக்காது.

ஓமோன்களின் ஓட்டம் என்றும், விதியின் ஆட்டம் என்றும் காதலை மெலினப்படுத்துவது இந்த சமூகத்திற்கு ஒன்றும் புதிதல்ல. காலம் காலமாக காதல் என்பது என்னவென்பதை காலம் கற்பித்தும் கற்க மறந்திருக்கிறது அல்லது மறுத்திருக்கிறது இந்த சமூகம். கடவுளைப்போல்த்தான் காதலை நம்புகிறவர்களும் குறைந்து கொண்டே வருகிறார்கள்.

“காதல் தோல்வியில் போதைக்கு அடிமையான பேதை. காதலை ஏற்காத பெண்ணின் மீது அசிட் வீச்சு. பலரை காதலித்து பணம் திருடிய பெண். காதலிப்பதாக ஏமாற்றி பலாத்காரம் செய்த ஆண். பெற்றவர்களின் சம்மதம் இல்லாததால் தூக்கில் தொடங்கிய காதலர்கள். திருமணமானபின் பழைய காதலனுடன் ஓடிய காதலி.”

இவ்வாறு காதலைப்பற்றிய கேவலமான செய்திகள்தான் பட்டி தொட்டி முதல் பத்திரிக்கை வரை பேசு பொருளாகி இருக்கிறது. வென்ற காதல்களை, சாதித்த காதலர்களை தேடித்தேடி ஆவணமாக்குங்கள். முதிர்கன்னிகளாக (மணமாகாமல் உள்ள ஆண்கள் உள்ளடங்கலாக) இறந்த மற்றும் இருக்கின்றவர்களைத்தேடி பிடித்து அவர்களின் கதைகளை கேளுங்கள். பிறர் கேட்கும் படி செய்து விடுங்கள். இந்த விசித்திரமான சமூகத்தையும், தங்கள் புனிதமான காதலையும் விட்டு விட முடியாமல் இரண்டுக்காகவும் தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்தவர்கள் அவர்களில் பெரும்பாலானவர்கள். உங்களுக்கு புரியுமாறு சொல்வதென்றால் மாறா படத்தில் வரும் மீனாட்சி வெள்ளையன் போல.

ஆகவே, சாதித்த காதல்கள் சிறுபான்மையாக இருப்பதால்தான் இன்னும் நீதி கிடைக்கவில்லை. பெரும்பான்மை ஆகுங்கள். எல்லோரும் காதலியுங்கள். திகட்டத்திகட்ட காதலியுங்கள். சமூகக்களைகளின் வேர்கள் பிடுங்கப்பட காதலியுங்கள். அடுத்த தலைமுறையாவது சமத்துவமாக வாழ காதலியுங்கள். வாழும் போதே சொர்க்கம் காண காதலியுங்கள். உங்களுக்காக முக்கியமாக எனக்காக காதலியுங்கள். காதலித்துக்கொண்டே இருங்கள்.

*இப்படிக்கு,*
*காதல்*



# அட்டைப்படம் சொல்லும் கதை

**புகைப்படப்பிடிப்பாளர்:~ பிரணவன் கண்ணா**
**புகைப்படம் எடுக்கப்பட்ட இடம் :~ நல்லூர்**
**கருப்பொருள்:~ காதலும் காஃபியும்**

அந்த நகரத்து வீதியின்
ஓரத்தில் ஓர் கடை
தேநீர்க்கடையாக இருக்க வேண்டும்!
யாருமே இல்லை என்றில்லை!
எதற்கோ ஓடர் கொடுத்து விட்டு
ஒரு பெண்மணி
கதிரையில் காத்திருந்தாள்.

அவள் கொடுத்த ஓடர்
விசேடமானதாக இருந்திருக்க வேண்டும்!
கடையைத்தாண்டி
தெரு வரை ஓர் வாசனை!
மங்கல வாசனைக்கு
மஞ்சளை சொல்வார்கள்...
நறுமண வாசனைக்கு
ஊதுபத்தி சொல்வார்கள்...
மலர்களின் வாசனைக்கு
மல்லிகையை சொல்வார்கள்..
அத்தனை வாசனையும்
தோற்குமளவு ஒரு வாசனை...
அந்தக்கடையின் அடுப்பங்கரையில்..

தளம்பல்களோடு
ஒரு தட்டு!
தட்டின் மேலே..
இரு தேநீர் கோப்பைகள்..
வந்த வாசனையாவும்
அந்த கோப்பைகளில் இருந்துதான்!
பூவோடு சேர்ந்த நார் போல
தேநீரோடு சேர்ந்த கோப்பைகளும்
கமகமத்தன!

தேநீரா?
தேநீரின் வாசனை
தெருவரை போகுமா?
பாலோடு
சீனி சிறுக சேர்த்து
சாயம் சாதுவாய் காட்டிய
சுடுநீருக்கு இவ்வளவு மணமா?
சுடுநீரெல்லாம் தேநீருமல்ல!
தேநீரெல்லாம் சுடுநீருமல்ல!
தேநீரில் பலவகை!
அதில் இது ஒரு வகை!

நுரைகளால் நிரம்பியிருந்தன
தேநீர்க்கோப்பைகள்!
தள்ளாடிய தட்டால்
நுரைகள் சில
தட்டையும் எட்டிப்பார்த்தன!

அவள் ஒருத்தி தான் இருக்கிறாள்!
ஏன் இரண்டு தேநீர்?
ஒன்றெடுத்தால் ஒன்று இலவசமா? - இல்லை
இரண்டும் இவளுக்கா?
இருக்கும்!

தேநீர் பிரியர்கள்
தேசத்தில் அதிகம்!
தேநீர் சமரசம் செய்த
சண்டைகள் அதிகம்!
தேநீர் தீர்வு சொன்ன
பிரச்சினைகள் அதிகம்!
தேநீர் ஆரம்பித்து வைத்த
உறவுகள் அதிகம்!
தேநீர் தெரிவு செய்த
காதலர்கள் அதிகம்!

தட்டோடு வந்தவன்
கோப்பைகளை ஒவ்வொன்றாய்
மேசை மேல் வைத்தான்!
சற்று பொறுங்கள்!
அவளெதிரே அவனும்
அமர்ந்துவிட்டான்!



அந்த கோப்பை மணத்ததோ
அந்த கடை மணத்ததோ
அந்த தெரு மணத்ததோ
தேநீரால் அல்ல!
காதலால்!

யாருமற்ற கடையில்
அவளுக்காக அவனும்
அவனுக்காக அவளும்
தேநீரோடு...
பேசிக்கொண்டே இருந்தார்கள்!
அவன் அளித்த ரோஜா இதழ்களை
அவனுக்கு எறிந்து விளையாடினாள்!
பதிலுக்கு அவள் அளித்த கச்சானை
அவன் வீசி விளையாடினான்!
தேநீர் மட்டும்
அப்படியே இருந்தது!
விளங்கவில்லையா?
முன் அட்டையை பாருங்கள்!
இன்னும் விளங்கவில்லையா?
காதலியுங்கள்!

தீவிர காதலர்களோ ?
இருக்கும்!
அவனுக்கும் அவளுக்கும்
வயது எண்பதுக்கு மேல்
இருக்கும்!
இந்த வயதில் காதலர்களா?
இந்த வயதிலும் காதலர்கள்!

யாருமற்ற கடையில்
இந்த முதியவர்கள்
ஏன்? எதற்கு? எப்படி?

தாஜ்மஹால் போல
ரோஜாக்கள் போல
இதயங்கள் போல
தேநீர்
இவர்களின் காதல் சின்னம்!
இவர்களுக்கென்றே ஒரு கடை!
தினமும் வருவார்கள்!
தினமும் கதைப்பார்கள்!
தினமும் தேநீர் குடிப்பார்கள்!
தினமும் காதலிப்பார்கள்!
அதிலும் இன்று
அவர்கள் திருமணநாளாம்!

தேநீர் மட்டும் ஆறியிருந்தது!

## துமியின் அறப்பணிகள்

Shylo Foundation நிதியில்,
Nilash_Foundation ஒருங்கிணைப்பில்,
துமி ஊடாக, மாணிக்கபுரம்
பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு
அன்றாட தேவைப் பொருட்கள் அடங்கிய
பொதிகள் வழங்கப்பட்டன.
துமியின் வன்னிமாவட்ட
ஒருங்கிணைப்பாளர் N.திவாகரன்
முப்பது பயனாளிகளுக்கான
பொதிகளைக்கையளித்தார்.





## வரலாற்றிலிருந்து சில தகவல்கள்

யாழ்க் குடாநாட்டின் மூன்று கரைகளிலும் விளங்கிய துறைமுகங்கள் வர்த்தகப் பண்பாட்டுப் பாரம்பரியங்களை திசைகளெங்கும் பரிமாற்றிக்கொள்ளும் வாயில்களாக திகழ்ந்தன என்பதை அவற்றின் பெயர்களைக் கவனிக்கும் போதே அறிந்துகொள்ளலாம்.

கப்பல்கள் இத்துறைகளிலிருந்து எங்கே புறப்பட்டுச் சென்றனவோ அந்த இடத்தின் பெயரையே இவை பொதுவாகக் கொண்டிருந்தன. கொழும்புத்துறை, காயாத்துறை, சம்பித்துறை ஆகிய பெயர்கள் இவ்வகையினவே. இங்கிருந்து புத்தகயாவுக்கு சென்றமையாலே காயாத்துறை அல்லது கசாத்துறை என்ற பெயரை அத்துறைமுகம் பெற்றிருந்தது.

சோழ இளவரசி மாருதப்புறவீகவல்லி மாவிட்டபுரத்தில் கோயில் கட்டுவதற்காக வேண்டிய பொருட்களைத் தன் தந்தையாகிய சோழ மன்னனிடமிருந்து வருவித்தாள். அப்பொருட்களை எல்லாம் ஒருவன் கப்பலில் கொண்டுவருகின்ற செய்தி அந்நாட்களில் ஊர் முழுவதும் பரவியிருந்தது. மக்கள் கூடும் இடமெல்லாம் அவன் வருகையே பேசுபொருளானது. அவன் பெயரே அவ்வேளை நாட்டிலுள்ள அனைவராலும் உச்சரிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அந்தப் பெயர்தான் காங்கேயன். அவனே அப்பொருட்களை கப்பல்களில் கொண்டுவந்து காயாத்துறையில் சேர்த்தான். அத்துறை அன்றுமுதல் காங்கேயன் துறை ஆயிற்று என்று வரலாற்றாசிரியர்கள் சிலர் காரணங் கூறுகின்றனர்.

காங்கேயனாகிய முருகப் பெருமானது திருவுருவச்சிலை கொண்டுவரப்பட்டு இங்கே இறக்கப்பட்டமையால் இத்துறை காங்கேயன்துறை என்ற பெயரையும் பெறுவதாயிற்று என்றும் சிலரால் கருதப்படுகிறது.

தட்சணகைலாச மான்பியப்படி சூரசங்காரம் முடித்த பின்பு கந்தவேளும் அவர் பரிவாரங்களும் கதிர்காமம் நோக்கி வரும் வழியில் கப்பலேறி துறையில் வந்திறங்கிய இடமே காங்கேயன்துறையாகும் எனவும் பெயர் விளக்கம் கொடுக்கப்படுகிறது.
(வி.குமாரசுவாமி : 1935 பக் 26-29)



# சித்திராங்கதா

19

காவ்யமோகன்

காங்கேயன் என்ற ஒருவனால் சிறப்புபெற்றதாலே காங்கேசன்துறை என்ற பெயர் தோன்றியிருக்க வேண்டும் என்பதும் சில ஆய்வாளர் முடிவாகும்.

“அவனி புகழ் (பயில்) குடி நயினாப்பணிக்கனெனுமவன் மிகுந்தோன் (பலமிகுந்த)
கவளமதக்களிற்றண்ணல் காங்கேசன் தேவையர்கோன்
தவமென்ன விளங்கு புகட்சகவீரன் தாரணியிற் சிவனருளாலிக் காதையைச் செந்தமிழ்ப் பாமாலை செய்தான்”

என்கிற கண்ணகி வழக்குரை காதை என்ற ஈழத்திலக்கிய நூற் பாடல்ப்படி ஆரியச் சக்கரவர்த்திகள் காங்கேசன் என்ற சிறப்பு விருதினையும் பெற்றிருந்தனர் என அறியமுடிகிறது. எனவே ஆரியச்சக்கரவர்த்தி இத் துறைமுகத்தை பெருப்பித்து வர்த்தக வளர்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்தமையால் இப்பெயர் பெற்றிருக்கலாம் என்றும் ஊகிக்க முடிகிறது.

இனி கதைக்குள்ளே பயணிப்போம்...

## காங்கேசந் துறை

மாருதவல்லியை தேடி வந்த வருணகுலத்தானும் மகிழாந்தகனும் காங்கேசந்துறையை வந்தடைந்தனர். சுற்றி மையிருட்டு. இங்கு மாருதவல்லி எங்கு மறைத்து வைக்கப்பட்டுள்ளாள் என்பதே இருவர்க்கும் அப்போது பெரிய கேள்வியாக இருந்தது. அதை அறிந்து கொள்ள ஏதேனும் உபாயம் தென்படாதா என சுற்றும் முற்றும் இருட்டினை ஊடுருவி தேடிக்கொண்டிருந்தனர் இருவரும்.

அந்நேரம் அருகே மரம் ஒன்றிலிருந்து புது வகை சத்தம் ஒன்று கேட்டது. வருணகுலத்தானிற்கு அது புதுவகை அல்ல. முன்னர் எங்கோ கேட்ட சத்தம் தான். விளங்கிற்று. தன் குறுவாளினை உருவி மரத்தை நோக்கி எறிந்தான் வருணகுலத்தான். உக்கிரசேனன் வெளிப்பட்டான்.

மரத்திலிருந்து தவறிக் குதித்தவன் விரைந்து தப்பியோட எத்தனித்தான். குதிரையிலிருந்து பாய்ந்துவந்த வருணகுலத்தான் உக்கிரசேனன் கழுத்தினை இறுக்கப்பிடித்து தன் மணிக்கட்டினால் நெருக்கினான்.

“பொடியனே, என்னையே ஏமாற்றி விட்டாயா?. உனக்கு எத்தனை தைரியம் இருந்தால் மீண்டும் என்னைக் கண்டபின்னும் உன் விசித்திர சத்தம் மூலம் யாருக்கோ சைகை கொடுக்கிறாய்? உன்னை இன்று உயிரோடு விட்டால் பார்” என்று கழுத்தை நெருக்கினான் வருணகுலத்தான்.

வருணகுலத்தானின் இரும்புப்பிடியிலிருந்து விலகிக்கொள்ள முடியாமல் கத்தினான் உக்கிரசேனன்.

“ஐயா..ஐயா... என்னை விட்டுவிடுங்கள்.. நான் வெறும் ஊழியன் மட்டுமே, எனக்கு இட்ட பணியைத் தானே என்னால் செய்ய முடியும், தயவு கூர்ந்து என்னை விட்டுவிடுங்கள்”

“இனியும் உன் பிதற்றல்களிற்கு நான் செவிசாய்க்க மாட்டேன். உண்மையை நீ கூறினாலன்றி உன்னை உயிரோடு நான் விட்டுவைக்க மாட்டேன்.”

“என்ன உண்மை வீரரே, எல்லாவற்றையும் தாங்களே கச்சிதமாய் புரிந்து கொண்டீரே, இனியும் என்ன உண்மை?”

“உன் நாடகத்தை நிறுத்தப்போகிறாயா? இல்லை உயிரை இழக்கப்போகிறாயா?” என்று கூறியபடி கழுத்தை இன்னும் அழுத்தமாக நெருக்கினான் வருணகுலத்தான்.

மூச்சுத்திணறியபடி கத்தினான் உக்கிரசேனன். “ஐயா, கூறிவிடுகிறேன்..கூறிவிடுகிறேன்.. மாருதவல்லி இருக்குமிடத்தை இப்போதே கூறிவிடுகிறேன், என்னை விட்டுவிடுங்கள்” என்று கத்தினான்.

விடுவித்தான் வருணகுலத்தான். உக்கிரசேனனும் கூறினான்.

“இவனை எப்போதும் நம்பக்கூடாது வருணகுலத்தாரே, இவனையும் உடன் அழைத்துச் சென்றாக வேண்டும்” என்றான் மகிழாந்தகன்.


“அதுவே சரி சேனாதிபதி” என்று கூறியபடி அவன் கழுத்தைப் பற்றியபடியே புரவியில் அமர்த்தினான் வருணகுலத்தான்.

“என்ன பயப்படுகிறாயா உக்கிரசேனா? உனக்குத்தான் புரவியென்றாலே பயமாயிற்றே” என்று கேளிக்கையாய்க் கேட்டபடியே தானும் புரவியில் ஏறினான் வருணகுலத்தான்.

“அது உண்மைதான் வீரரே, ஆனால் நான் இப்போது என்ன செய்ய முடியும்? தங்களிடமிருந்து தப்பிக்க உலகின் எந்த மாவீரனாலுமே இயலாதாம். நான் யார் பொடியன்”

“போதும் உன் கபடநாடகங்கள். ஒழுங்காய் மாருதவல்லி மறைத்துவைக்கப்பட்டுள்ள இடத்தை மட்டும் காட்டு” என்று கூறி புரவியினை செலுத்தத் தொடங்கினான்.

உக்கிரசேனனை கடுமையாகத் தாக்கும் எண்ணமும் வருணகுலத்தானிடம் இல்லை. ஏனெனில் அவன் மூலம் தான் பெற்றுக்கொண்ட உதவியையும் அந்த உதவியால் அடைந்த இன்பங்களையும் எண்ணுகையில் உக்கிரசேனன் மீது ஒரு நன்றியுணர்வும்



திவாகரன்

வருணகுலத்தானின் உள்ளத்தில் இருந்தது. ஆனாலும் மாருதவல்லியை மீட்டாக வேண்டிய நோக்கம் கருதி அதை அவன் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

உக்கிரசேனன் காட்டிய வழியே அந்த இருட்டிலே கடலின் கோரசத்தம் கேட்கும் தொலைவில் பாழ் அடைந்து போய் பார்ப்பதற்கு பயங்கரமாய் தெரியக்கூடிய ஓர் மாளிகை வாயிலிற்கு மூவரும் வந்தடைந்தனர்.

அந்த மாளிகையின் பயங்கரத்தோடு மாருதவல்லியின் பரிதாபமான நிலையை எண்ணிப்பார்க்கையில் மகிழாந்தகனும் வருணகுலத்தானும் கணநேரம் கூட காலம் தாமதிக்காமல் புயலைப்போல் அந்த மாளிகைக்குள் பிரவேசித்தனர்.

அவர்கள் வேகம் கண்களில் தெரிபவர்கள் யாரையும் விட்டுவைக்கவில்லை. அந்த மாளிகைக் காவலர்கள் என்ன நடக்கிறது என்று ஊகிப்பதற்கு முன்னே தாக்குதல்கள் அவர்களை நோக்கி நிகழ்ந்துவிட்டன.

தன் கையிலிருந்த ஒற்றை வாளினைக் கொண்டே எதிர்த்து வந்த அத்தனை விதமான ஆயுதங்களையும் தகர்த்தெறிந்தான் வருணகுலத்தான்.

மாளிகைக்குள் நுழைந்து ஒரு நாழிகைக்கும் குறைவான பொழுதிலே அவர்கள் மிக்கபிள்ளையை நிராயுதபாணியாய்ச் சந்திக்கும் சூழ்நிலையை உருவாக்கினர்.

“வாருங்கள் வீரர்களே... வாருங்கள்.. வாருங்கள்..” என்றபடியே உடம்பினை ஒரு சிலிர்ப்பு செய்தான் மிக்கபிள்ளை.

“தங்களுக்காகத்தானே காத்திருக்கிறேன். இவ்வளவு நேரமும் தாங்கள் நிகழ்த்திய பெரும்யுத்தம் கண்டு வியக்கிறேன்.
அபாரம் ! ஆனாலும் உங்களுக்கு இத்தனை பெரிய ஏமாற்றத்தை அளிக்க எனக்கே இப்போது மிகவும் வருத்தமாகத்தான் இருக்கிறது“

“என்ன உளறுகிறாய் மிக்கபிள்ளை?” என்று கொதிக்கும் கோபத்தோடு கேட்டான் மகிழாந்தகன்.

“உளறவில்லை நல்லைச் சேனாதிபதியே, உண்மை என்னவென்றால் தாங்கள் தேடி வந்த திரவியம் இங்கில்லை என்றெண்ணும் போதுதான் சிரிப்பு வருகிறது“ என்று கூறிச் சிரித்தான். உதட்டினை ஓரமாக்கிய அதே ஏளனச்சிரிப்பு. அது இருவருக்கும் இருந்த கோபத்தீயின் எண்ணெயாய் உருமாறியது.

“ஒரு மகாராணியை இந்த மாளிகைக்குள்ளேயா நான் மறைத்து வைப்பேன்? தங்கள் அளவிற்கு இல்லாவிட்டாலும் நான் அவ்வளவு மூடனல்ல”

கோபத்தில் பொறுமையிழந்த வீரர்கள் இருவரும் அந்நேரம் தம் உடன் வந்த உக்கிரசேனனை தேடினார்கள்.

“யாரைத் தேடுகிறீர்கள்? தங்களது வழிகாட்டியையா? ” என்று கேட்டு மேலும் சிரித்தான் மிக்கபிள்ளை.

உக்கிரசேனன் மீண்டும் எங்கோ மறைந்து விட்டான்.

“உன் இறுதிக் காலத்து சிரிப்பு இது மிக்கபிள்ளை. அதை நினைவில் கொள். முறையாய் உண்மையைக் கூறு”

“அப்படியே இருக்கட்டும் நல்லைச்சேனாதிபதியே, முடிந்தால் தாமே கண்டுபிடியுங்கள்.. முடிந்தால்” என்று அழுத்தமாய்ச் சொன்னான் மிக்கபிள்ளை.

மிக்கபிள்ளையின் வார்த்தைகளை கூர்ந்து அவதானித்துக் கொண்டிருந்த வருணகுலத்தான்

“சேனாதிபதியாரே, மிக்கபிள்ளையவர்களின் கடைசி ஆயுதமே இந்தப் போலித்தந்திரம் போல் தெரிகிறது. மாருதவல்லி இங்குதான் எங்கோ இருக்கின்றார்.உக்கிரசேனன் இம்முறை பொய்யுரைத்திருக்க வாய்ப்பில்லை என்றே கருதுகிறேன்”

“அடடே,, பெரும்புத்திசாலியாகத் தெரிகிறதே. தாங்கள் தான் தஞ்சையிலிருந்து வந்த தளபதியாரோ”

“ஆம் மிக்கபிள்ளை, வந்த உடனே உனக்கு அச்சம் பெருக ஈட்டிப்பாய்ச்சல் என்றொரு கோழைத்திட்டம் தீட்டினாயே, அதே தஞ்சை வீரர் இவர் தான்” என்றான் மகிழாந்தகன்.

இது மகிழாந்தகனின் உள்ளத்தில் தோன்றியிருந்த புதிய சந்தேகத்தின்

விளைவாகும். வருகின்ற வழியில் அவன் காத்தவராயனையும் ராஜமந்திரியாரையும் சந்தித்த கணந்தொட்டு அவனிற்கு இந்தச் சந்தேகம் தோன்றியிருந்தது. அதை மனதிலே எண்ணியிருந்தவன் சந்தர்ப்பம் கிடைத்ததுமே மிக்கபிள்ளையிடம் அவ்வாறு கேட்டான். ஆனால் மிக்கபிள்ளையின் பதில் அவனை மேலும் குழம்பத்திற்கே உள்ளாக்கியது.

“நானா ? அச்சமிகுதியால் ஈட்டிப்பாய்ச்சல் நிகழ்த்தினேனா? ” என்று கேட்டு விடாது சிரித்தான் மிக்கபிள்ளை.

“இந்தக் கதையை நல்லை இராச்சியத்தில் யார் வேண்டுமானாலும் நம்பட்டும் . ஆனால் அவ்வாறான மூடச்செயல் புரியும் கோழையல்ல இந்த மிக்கபிள்ளை” என்று கூறி மீண்டும் ஆணவமாய்ச் சிரித்தான்.

ஆனாலும் மிக்கபிள்ளையின் வார்த்தைகளையும் மகிழாந்தகன் முழுதாய் உண்மை என்று நம்பவில்லை.

“மகிழாந்தகரே, மிக்கபிள்ளை மிகுந்த சத்தியபுருசராக தெரிகிறதே, அவரின் வார்த்தைகளை கேட்டு நாம் வீணே காலங்கழியாமல் விரைந்து சென்று மாருதவல்லியைத் தேடுங்கள். நான் இந்த சத்திய புருசரை பார்த்துக் கொள்கிறேன்” என்று மகிழாந்தகனை நோக்கி கூறினான் வருணகுலத்தான்.

மகிழாந்தகன் மாளிகையினுள் ஒவ்வொரு அங்கமாகத் தேடத்தொடங்கினான். அவன் தேடலோடு மிக்கபிள்ளையின் கண்களை கூர்ந்து நோக்கிய வருணகுலத்தானிற்கு ஒரு உண்மை புலனானது.

*தேடல் தொடரும்...*



**கருத்து : ஸ்ரடியா இருக்கனும், அசையக்கூடாது!**
**திரைப்படம் : ஆதித்ய வர்மா**
**எழுதியவர் : சந்தீப்**

மித்ரசகி

# திரைத்தமிழ்

(பாட்டி பேரனின் அறைக்குள் வருகிறார். பேரன் படுத்து உள்ளான்)

பாட்டி :- ஆதித்யா எழுந்திச்சு உட்காரும்மா. அதெல்லாம் சரிதான். உனக்கு கல்யாணம் பண்ணிக்க அவசரம்னா, அப்பா எனக்கு கல்யாணம் பண்ணி வையுங்கனு கேட்கனுமே தவிர. கல்யாணத்தப்ப உங்க வயசு என்னனு கேட்கலாமா? அது தப்பு இல்லையாடா?

பேரன் :- நானும் மீராவும் எங்க பிரைவேட் பிளேஸ்ல இருந்தம்னு சொன்னா, அதெல்லாம் ஒன்னுமில்லை. என்னத்தையோ பண்ணிட்டு வந்திட்டாய்னு சொல்லி. அது என்னனு சொல்லு சொல்லு சொல்லுனு கேட்டா, என்னத்த சொல்றது பாட்டிம்மா?
Each us doesn't understand.

பாட்டி :- What do you expect him understand? காதல் என்றது காலெஜ்ல உங்க இரண்டு பேருக்கு உள்ள இருக்கிற ஸ்பேஸ். கல்யாணம்னா அது வேற ஸ்பேசு. இந்த பக்கம் 10 பேரு இருப்பாங்க. அந்த பக்கம் 10 பேரு இருப்பாங்க. இடையில இன்னும் நிறைய பேரு மூக்க நுழைப்பாங்க. ஜெட்ஜ் பண்ணுவாங்க. உங்களுக்கு என்ன பண்ணனும் என்ன பண்ணினா நல்லா இருக்கும்னு டிபேற் பண்ணுவாங்க. எத்தனை பேர் வந்தாலும் சரி, நீங்க 2 பேரும் ஸ்ரடியா இருக்கனும். அசையக்கூடாது.
That is great relationship.

பேரன் :- நீங்களும் தாத்தாவும் சேம் ஹாஸ்ற் என்டதால ஈசியா வொர்கொட் ஆஹிட்டுது.

பாட்டி :- ஆ! அதெல்லாம் ஒன்னுமில்லை. அவ்வளவு ஈசியா நடந்ததா? (இல்லை என்றவாறான தலையசைவுடன்) ம்ஹிம். அம்மாவும் சித்தியும் 2 பேரும் வாய்க்கு வந்தது எல்லாம் பேசினாங்க. இவள பாரு. இவள டெல்லிக்கு படிக்க அனுப்பி வைச்சது, தப்பா போய்ச்சுது. இப்ப நம்ம மானத்த அவள் வாங்கிட்டு வந்து நிக்கிறாள். இப்படி எல்லாம் பேசினாங்க. இதெல்லாம் கொமன். எல்லா இடத்திலயும் நடக்கிறது தான்.
When a women falls in love. A priority as a different.

பேரன் :- சரி. நீங்க என்ன பண்ணி இருந்தாலும், ஒத்துக்க மாட்டம்னு சொல்லி இருந்தா என்ன பண்ணி இருப்பீங்கள்?

பாட்டி :- ஒத்துக்க வைச்சிருப்பன்.

பேரன் :- ஒத்துக்க மாட்டம்னா. ஒத்துக்க மாட்டம். அந்த பேச்சுக்கே இடம் இல்லைனு சொல்லியிருந்தா?

பாட்டி :- அப்பவும் ஒத்துக்க வைச்சிருப்பன்.

பேரன் :- பாட்டிம்மா மீராவோட அப்பன் ஒரு கோபக்காரன்.

பாட்டி :- ஆ.. கோபக்காரன்னா உனக்கு. அந்த பிள்ளைக்கு அவர் அப்பாடா. முதலில நீ உன் கோபத்தை குறைச்சு கொள்.

(பேரனின் காதலி அறை உள்ளே வர பாட்டி பேரனையும் பேரனின் காதலியையும் வாழ்த்தி வெளியே செல்கிறார்.)



# ஈரநிலங்களின் மீது ஈரம் வேண்டும்

அதிரன்


ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதம் 02ஆம் தேதி உலகளாவிய ரீதியில் உலக ஈரநில தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஈரநிலங்களைப் பாதுகாப்பதன் மூலம் பல்லுயிர் வளங்கள் மற்றும் கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று பெப்ரவரி மாதம் 02ந்தேதி 1971ஆம் ஆண்டில் ஈரான் நாட்டின் ராம்சர் என்னுமிடத்தில் ஈரநிலங்களைப் பாதுகாத்தல் சம்பந்தமாக நடைபெற்ற மாநாட்டில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் துணைநிறுவனமான யுனோஸ்கோ அமைப்பானது பெப்ரவரி 02 ஈரநில தினம் என்று அறிவித்தது. அன்று முதல் ஒவ்வொரு வருடமும் வெவ்வேறுபட்ட தொனிப்பொருட்களின் கீழ் ஈரநில தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் இவ்வருடம் “ஈரநிலங்களும் நீரும்” ( “Wetlands and Water” ) என்பதன் கீழ் ஈரநில தினம் கடைப்பிடிக்கப்படகின்றது.

## ஈரநிலம் என்றால் என்ன?

ஈரநிலச் சூழல் தொகுதியானது உயிர்ப் பல்வகைமையைப் பொறுத்தவகையில் முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது. உலகில் பரந்து காணப்படும் ஆறுகள், தாழ்நிலங்கள், ஈரமான புல்வெளிகள்,



கழிமுகங்கள், கழிமுக, கடலோர குடியிருப்பு பகுதிகள், சதுப்புநிலக்காடுகள், பவளத் திட்டுகள், குளங்கள், நெற்பயிர் நிலங்கள், நீர்த்தேக்கங்கள் என்பவையெல்லாம் ஈரநிலப்பட்டியலில் உள்ளடங்குகின்றது. ஈரநிலங்கள் உயிரினங்களின் பல்வகைமைத் தன்மையைக் கொண்டிருப்பதனால் “நகரங்களின் பச்சை நுரையீரல்கள்” என அழைக்கப்படுகின்றன.




சேற்றுநிலம் என்றும் சகதி என்றும் மக்களால் அசௌகரியமாக அழைக்கப்பட்டுக் கழிவுகள் கொட்டுகின்ற இடமாக மாறிக்கொண்டிருக்கின்ற இடங்களுக்கு ஈரநிலங்கள் என்று பெயர் அதாவது குட்டை, குளம், ஏரி, போன்றவையே. ஈரநிலங்கள் எனப்படுவது நிலமேற்பரப்பு நீரால் நிரம்பிய நிலையில் இருத்தலை குறிக்கும். ஈரநிலங்களாக சதுப்புநிலம் அல்லது முற்றா நிலக்கரி விளைந்த நிலம் என அழைக்கப்படுகின்றது. நீர் தேங்கியுள்ள நிலமானது இயற்கையாகவோ செயற்கையாகவோ நீரினால் நிரம்பியிருப்பதுடன் அந்நீரானது ஓரிடத்தில் தங்கியிருப்பதுடன் ஓடும்நீர், நன்னீர் என்பவற்றுடன் கடல்நீரையும் உள்ளடக்கி இருக்கும் பகுதி எனவும் கூறப்படுகிறது.

இவை வற்றுப்பெருக்குக் காலத்தில் 6மீட்டரினை விட அதிகரிக்காத ஆழத்தை கொண்டவையாக காணப்படுகின்றன. இவ் ஈரநிலங்கள் இன்று முக்கியம் பெற்றதொன்றாகக் காணப்படுகின்றது. ஏனெனில் இவ் ஈரநிலங்கள் உயிரினங்கள் வாழும் ஒரு சூழலாகவும் காணப்படுகின்றது.

பொதுவாக ஈரநிலங்கள் இருவகைப்படும். அவையாவன,

1. உப்புநீர் சதுப்புநிலம்

அதிக ஆழமில்லா நிலப்பகுதிகளில் கடல்நீர் புகுந்த சேற்றுநிலம், கடலோர சதுப்புநிலம் எனப்படும்.

2. நன்னீர் சதுப்பு நிலம்

ஆற்றங்கரைகள் அல்லது ஆற்றின் முகத்துவாரம் அல்லது ஏரிநீர் வடிநில வண்டல் பகுதி நிலம் நன்னீர் சதுப்புநிலம் எனப்படும்.

ஈரநிலங்களில் வளரும் தாவரங்களினையும் அவற்றின் தன்மைகளும் ஏற்ப அவை மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன

1. உள்நாட்டு நன்னீர் ஈரநிலம்- ஆறுகள், சேற்றுநிலம், கண்டல் தாவரங்கள், வில்லுக்கள்
2. உவர்நீர் நிலம்- ஆற்றுமுகம், கடனீரேரி, கடற்கரை, முருகைக்கல்
3. மனிதனால் உருவாக்கப்பட்ட ஈரநிலம்- குளம், நீர்த்தேக்கம், உப்பளம்

ஈரநிலங்களில் காணப்படும் நீரானது சூரியஒளி உட்புகுவதற்கு ஏற்றவாறு குறைந்த ஆழமுடையவாறு காணப்படுகின்றது. இதனால் தாவரங்களின் ஒளித்தொகுப்புக்கு தேவையான சூரியஒளி கிடைக்கிறது. இதன் காரணமாக அங்கிகள் தமக்கு தேவையான உணவினை தாமே தயாரித்து கொள்கின்றன. இது மட்டுமன்றி ஈரநிலங்களைச் சுற்றியுள்ள உயர்நிலைப் பகுதிகளை விட உற்பத்தி மற்றும் உயிர்ப்பல்வகைமை அதிகமாக காணப்படுகின்றது. இதனால் உயிரினங்கள் இனப்பெருக்கத்தினை மேற்கொள்ளவும் வாழ்விடங்களை அமைக்கவும் இடப்பெயர்வுகளை மேற்கொள்ளவும் வாய்ப்புகள் கிடைக்கின்றன. அத்துடன் ஈரநிலங்கள் உயர்போசணை பொருட்களின் செறிவையும் தன்னகத்தே கொண்டுள்ளன. இங்கு பறவையினங்கள், மீனினங்கள், நீரத்தாவரங்கள், விலங்குகள், பூச்சிகள், ஆமைகள், பாம்புகள், முலையூட்டிகள் போன்றன வாழ்கின்றன.

உலகம் முழுக்க மனிதனின் தொடர் செயல்களால் ஈரநிலங்கள் மிகப்பெரிய அழிவை சந்திக்கின்றன. பல்லுயிரி வளம், நிலத்தடி நீர்வளம், நீரை வடிகட்டி நன்னீர் ஆக்குதல், உணவுச்சங்கிலியின் உறுதியான பிணைப்பு ஆகியவற்றை உறுதி செய்யும் இவற்றின் அழிவு மேற்கூறிய எல்லாவற்றையும் காணாமல் செய்கிறது. 2004இல் சுனாமி நம் நாட்டை தாக்கியபொழுது சதுப்புநிலக் காடுகள் அதன் தாக்கத்தை பெருமளவில் குறைத்தது குறிப்பிடத்தக்கது. வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் தடுப்பதும் இடம்சார் காலநிலை, நுண்காலநிலை என ஒழுங்காக மழை, வெயில் ஆகியன அதனதன் காலங்களில் உண்டாவதையும் உறுதிசெய்கிற வேலையையும் இவைதான் செய்து வந்திருக்கின்றன. உலகில் உவர்நீர் நிறைந்த கடலுக்கும், நிலங்களுக்கும் இடையில் குறைந்த ஆழத்தில் ஆண்டு முழுவதும் நீர் தேங்கியிருக்கும் பகுதியாக ஈரநிலங்கள் உருவாகின.

பூமியின் மொத்தப் பரப்பில் 6% பகுதி சதுப்புநிலங்களாக உள்ளன. இவை பெரும்பாலும் இயற்கையாக உருவானவை, மனிதனால் உருவாக்கப்பட்டவை என இரண்டு பிரிவாக வகைப்படுத்தப்படுகின்றன. ஈரநிலக் காடுகள், குட்டைகள் உள்ளிட்டவை இயற்கையாக உருவானவை என்றும், ஏரிகள், குளங்கள், நீர்தேங்கும் குவாரிப்பள்ளங்கள் ஆகியவை மனிதனால் உருவாக்கப்பட்டவை என்றும் வகைப்படுத்தப்படுகின்றன.


குப்பைத் தொட்டியான கல்லுண்டாய் ஈரநிலம்
குப்பைத் தொட்டியான கல்லுண்டாய் ஈரநிலம்

பிரத்தியேகக் குணங்கள் கொண்ட புல் செடிகள், அரியவகை மரங்கள், நீர் நிலைப் பறவைகள், சிலவகை விலங்குகள் என அனைத்தும் ஒருங்கிணைந்து வாழும் பகுதியாக சதுப்பு நிலங்கள் உள்ளன. எவ்வித திட்டமிடலும் இல்லாமல் வேகமாக அதிகரித்து வரும் நகரமயமாக்கல், வேளாண் உற்பத்தி அதிகரிப்புக்காக மேற்கொள்ளப்படும் திட்டங்கள், அணைகள் உள்ளிட்ட கட்டுமானத் திட்டங்கள், குடியிருப்புகள், தொழிற்சாலைகளுக்காக ஆக்கிரமிப்பு செய்வது போன்ற நடவடிக்கைகள் மூலம் இயற்கையின் கொடையான ஈரநிலங்கள் பாழாகி வருகின்றன. ஈரநிலமானது சூழல் கலாசார அடிப்படையிலும் பொருளாதாரத் துறையிலும் முக்கியத்துவமாகின்றது. இந்நிலத்தோடு தொடர்புடைய வரலாறு மனித நாகரிகத்தின் ஆரம்பத்தோடு பிணைந்துள்ளதெனலாம்.

ஈரநிலங்களில் நத்தைகள், சேற்று நண்டு, கடல் நண்டு, கடலேரி நண்டு, ஒற்றைக் கவ்வி நண்டு, சிங்கி இறால், பால் இறால், கண்டற்சிப்பி, ரெலஸ் கோபியம் சிப்பி, லிற்றோரிச் சிப்பி, கண்டல் நீலச் சிப்பி, ஊரி, நீர்ப்பல்லி. கண்டற்கொக்கு, வெண்கொக்கு, கடற்புள், ஆக்காட்டிக் கருவி, மீனினங்கள், பாலூட்டிகள், ஈருடக வாழிகள், ஊர்வன போன்ற உயிரினங்களும், பறவைகளும் சஞ்சாரம் செய்கின்றன.





# நெற்றிக்கண்

கோபி பிரகாஷ் திருக்குமரநாதன்

“நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே” என்று கூறிய நக்கீரரின் வழியில் வந்தவர்கள் கூட நெற்றிக்கண் என்ற விடயத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதுவும் இன்றைய விஞ்ஞான யுகத்தில் கடவுளின் இருப்பையே கேள்விக் கேட்கும் மக்கள் அவரின் அங்கமாக குறிப்பிட்ட நெற்றிக்கண்ணை மட்டும் ஏற்றுக்கொள்வார்களா? என்றால் விடை கண்கூடு.

சரி விஷயத்துக்கு வருவோம் நாம் நெற்றிக்கண் என்று கூறுவதைப் போல எகிப்தியர்கள் சுமார் 3500 வருடங்களுக்கு மேலாக உடலில் ஒரு அங்கத்திற்கு மூன்றாவது கண் என்று பெயர் வழங்கி வருகிறார்கள். உண்மையில் அவர்களும் நம்மைப்போல கண்ணைத்தான் குறிக்கின்றார்களா என்றால் அதுதான் இல்லை. அவர்கள் மூன்றாவது கண் என்று குறிப்பிடும் பகுதி மூளைக்குள் அமையப்பெற்ற ஒருவித கூம்புச்சுரப்பி. Halen என்ற அறிஞர் இதை ஆன்மாவின் இருப்பிடம் என்று வர்ணித்திருக்கின்றார். இச்சுரப்பியின் ஆற்றல் அதிகரிக்க மனிதனுள் அபரிமிதமான சக்தி உண்டாகும் என்றும் எகிப்தியர்கள் நம்பினார்கள்.

இதைப்பற்றி அறிவியல்பூர்வமாக Lucy என்கின்ற ஆங்கிலப்படத்தில் அருமையாக விளக்கியிருப்பார்கள். சாதாரணமாக மனிதர்களாகிய நாம் மூளையின் சிறுபங்கையே பயன்படுத்துகின்றோம். ஆனால் நாம் நமது மூளையை முழுமையாக பயன்படுத்தினால் எம்மால் கற்பனை கூட செய்ய முடியாத ஆற்றலகளை வெளிப்படுத்த



முடியும் என்பது எத்தனையோ ஆராய்ச்சிகள் வாயிலாக நிரூபணமாகிவிட்டது. அவ்வாறு விசித்திர ஆற்றல்களைப் பெற்றவர்களை நாம் யோகிகளாகவும் சித்தர்களாகவும் வரையறுத்து விடுகின்றோம். மூளையை நாமும் அவர்களும் பாவிக்கும் அளவிலுள்ள வித்தியாசம் தான் அத்தகைய விசித்திர ஆற்றல்களுக்கு அச்சாணி.

எனவே முன்னோர்களால் ஆதியோகியாக வர்ணிக்கப்படுகின்ற சிவன் என்ற கதாப்பாத்திரம் உண்மையில் இருந்து இருந்தால் அவரது அதீத ஆற்றலுக்கு உவமையாய் முக்கண் சித்தரிக்கப்பட்டிருக்கலாம்.அது காலப்போக்கில் மூன்றாவது கண்ணாக புராணம் மற்றும் இதிகாசங்களில் புனையப்பட்டிருக்கலாம். இவ்வாறு மூன்றாவது கண்ணை பற்றி பல்லாயிரம் கதைகள் எழுந்திருந்தாலும் எகிப்தியர்களைப் போன்று மூன்றாவது கண்ணை மூளைக்குள் தேடாமல் வெளியில் தேடியது தான் எம்மை அறிவியலில் இருந்து தூர நிற்க வைத்துவிட்டது.

இவ்வாறு புளிய மரத்தில் பேய் உலாவுவது தொடங்கி கடவுளின் படங்களில் பின்னால் சித்தரிக்கப்படும் ஒளிவட்டம் வரை ஒவ்வொன்றுக்கும் விஞ்ஞான ரீதியாக எதோ ஒரு காரணம் இருக்கத்தான் செய்கின்றது.என்ன வாய்வழியாக கதைகள் பரிமாறிய காலத்தில் ஒவ்வொருவரும் மிகைப்படுத்தப்போய் இன்று அக்கதைகள் யாவும் கற்பனையே என்ற மாய வலைக்குள் சிக்கிவிட்டன. ஆனால் ஒவ்வொன்றையும் தோண்டியெடுத்து அறிவியல் ரீதியாக ஆராயமுற்படும்போது அந்த புனைவுகளுக்கான தகுந்த பதில் நிச்சயம் கிடைக்கும்.

ஏனெனில் “எமது முன்னோர்கள் ஒன்றும் முட்டாள்கள் இல்லை”

மறுபக்கம்

# தொடரும் பனிக்காலம்...

நித்தம் பொழியும்
வெண்பனியாய்
நினைவுகள்

ஈரம்தோய்ந்து குளிரில்
நடுங்கும் மலராய்
மனம்

குளிர்காய
உன் விம்பத்தீயேனும்
கிடைக்காதோ என ஏங்கும்
பேதை நான்

தணல் வெம்மை தரும்
மாயப் பனிக்கட்டி நீ

காலநதிக்கரையில்
புதிதாய் பூத்திருக்கும்
காளானாய் நாம்

ஓர் ஆரத்தில் கோர்க்கப்படும்
இரு இரத்தினங்களாகும்
நாளுக்கான காத்திருப்பு!

சாரளாய்த் தொடரும்
பேரின்பப் பெருங்காதல்

அத்தனையும் குளிராய்
எனைச் சூழ!

ஓலைக் குடிசையில்
உனை நினைத்து
கவிபாடி கரைகிறேன்

எட்டிநின்று கண்சிமிட்டி
மறைகின்றாய் நீ
தருவாக!



றுஸ்னா நவாஸ் ( மாவனல்லை)




சமகால உலகில் மனிதன் எத்தனை புதுமைகளோடும், மாற்றங்களோடும், தொழில்நுட்ப முன்னேற்றங்களோடும் வாழ்வியலைக் கடத்திச் சென்றாலும், இன்றைய சந்ததியினர் தமது அடியினைத் தேடிப் பயணப்பட ஆரம்பித்திருக்கின்றனர். இச் செயற்பாடு ஒரு காலக்கட்டாயமான தோற்றப்பாடாகும். இத்தோற்றப்பாடு விவசாயத்திற்கும் விதிவிலக்கான ஒன்றல்ல. இன்றைய விவசாயிகளும் அலகுப்பரப்பில் அதி உச்ச விளைச்சலைப் பெற என அனைத்து வகையான இரசாயன வளமாக்கிகள், பீடை நாசினிகள், களைநாசினிகள் எனப் பாவனைக்குட்படுத்தி மண்வளமும், நீர்வளமும் பெரிதளவில் மாசாகியுள்ளதை உணர்ந்துள்ளனர். இதன் தொடர்ச்சியாகக் கணிசமானளவு விவசாயிகள், எமது பாரம்பரிய செய்கை முறையான "இயற்கைவழி விவசாயத்தினை" மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். சாதாரணமாக இரசாயனங்களைப் பாவித்துச் செய்யப்படும் விவசாயத்தோடு ஒப்பிடுகையில், இயற்கைவழி விவசாயமானது நூற்றுக்கு நூறுவீதம் சூழல் நேயமானது ஆகும்.



இன்று ஈழச்சூழலியலில் இயற்கை வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் சந்தை விலைகளினை அவதானிப்பீர்களாக இருந்தால் அவை இரசாயன உரப்பாவனையால் உருவான விளைபொருட்களைவிட, கணிசமானளவு விலைஉயர்வானதாகக் காணப்படும். அதற்கான காரணம் இயற்கைவழி விவசாயம் பரவலாக மேற்கொள்ளப்படாமையே ஆகும். தற்பொழுது ஏற்பட்டுள்ள இயற்கைவழி விவசாயம் தொடர்பான விழிப்புணர்வு எதிர்காலத்தில் இயற்கை விவசாய உற்பத்தியினைப் பன்மடங்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. காலவோட்டத்தில் இயற்கை விவசாய உற்பத்திகளுக்கான விலை குறைவடைவதற்கான வாய்ப்புக்களே அதிகமாகக் காணப்படுகின்றன. காரணம் இரசாயன விவசாய செய்முறையினூடு ஒப்பிடுகையில் இயற்கைவழி விவசாயத்தில் உள்ளீடுகளின் செலவீனம் குறைவானதாகும். இரசாயன உரங்களுக்கும், பீடைநாசினிகளுக்கும், களைநாசினிகளுக்கும், மீதிறன் விதைகளுக்கு-மெனச் செலவளிக்க வேண்டிய தேவை இருக்காது. மாறாக இயற்கை விவசாயத்தில் இயற்கை உரங்களையும், இயற்கை வழியான நாசினிகளையும் நாம் தயாரித்தும் அல்லது மிகக் குறைந்த விலையில் உள்ளூர் வட்டத்தில் பெற்றுக் கொள்வதற்கான கட்டமைப்புக் காணப்படும். இவ்வாறாக விவசாயிகளுக்குச் செலவீனம் குறைகின்ற பட்சத்தில், உள்ளீட்டுப் பொருட்களுக்கான செலவீனம் குறைந்து பொருட்களை ஒப்பீட்டளவில் குறைவான விலையில் சந்தைப்படுத்த முடியும். தற்காலத்தில் இயற்கைவழி வேளாண்மையினால் பாரியளவிலான உற்பத்தி வகிபாகத்தை வழங்கமுடியாமல் இருக்கின்றமை, இயற்கைவழி விவசாயம் தொடர்பான விழிப்புணர்வு விவசாயிகளுக்கு இல்லாமை, போதியளவான சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள் இன்மை, போன்ற சவால்களால் இயற்கைவழி விவசாய உற்பத்திப் பொருட்கள் சாதாரண விவசாய விளைபொருட்களுடன் ஒப்பிடுகையில் கணிசமானளவு உயர்விலை கொண்டு அமைந்துள்ளது. இதன்காரணமாக மேல்நாட்டு மற்றும் நடுத்தர வர்க்க மக்கள் தமது பொருளாதார இயலுமைகளுக்கு ஏற்றவகையிலும், நஞ்சற்ற உணவுப்

பொருட்களை உணவாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும், அதிகளவாகக் கொள்வனவு செய்கின்றனர். மேற்கூறிய சந்தைவாய்ப்பு, விழிப்புணர்வு என்பவற்றை இயற்கைவழி விவசாயத்திற்கு ஏற்றதாக வாய்ப்புக்களை ஏற்படுத்தி சீர்செய்கின்ற பட்சத்தில் நிச்சயமாக இயற்கைவழி விவசாய உற்பத்திப் பொருட்கள் மிக மலிவான விலையிலும், அனைத்துத் தர மக்களுக்கும், அனைத்து பிரதேசங்களிலும் கிடைக்கக்கூடியவையாகிவிடும்.

தற்போதுகூடப் பெரும்நகர்ப்பகுதிகளில் காணப்படுகின்ற பல் அங்காடிகளில் இந்த சேதனவழி அல்லது இயற்கைவழி விவசாய உற்பத்திப் பொருட்களுக்கென தனியான பகுதிகள் ஒதுக்கப்பட்டு காணப்படுகின்றன, வழங்கலுக்கு மேலதிகமான கேள்வியும் அப் பகுதிகளில் காணப்படுகின்றன.



விவசாயத்தில் பெருமளவு உபயோகிக்கப்படும் செயற்கை உரங்கள், பூச்சி கொல்லிகள், ஹார்மோன்கள் போன்ற செயற்கை இடுபொருட்களைத் தவிர்த்து பயிர்ச்சுழற்சி, பயிர்க்கழிவுகள், கால்நடைகளின் எருக்கள், கனிமச் சேர்க்கைகள், உயிரியல்ரீதியான பயிர் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து முறைகளைப் பெருமளவு பயன்படுத்துவதனால் உணவு மிகவும் ஆரோக்கியமானதாகவும், நஞ்சற்றதாகவும் கிடைக்கப் பெறுகின்றது. இதனால் பல்வேறு உணவுரீதியாக ஏற்படுகின்ற நோய்த்தாக்கங்களில் இருந்து பாதுகாப்புப் பெறலாம். அத்தோடு சூழல் சமநிலை, அங்கிகளின் வாழ்க்கை வட்டம் என்பன மேம்படுவதோடு, ஏற்றுமதியிலும் பெரும்பாலான கேள்வி சேதன / இயற்கை விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு இருப்பதால் நாட்டுக்கு இலாபமீட்டும் முயற்சியாகவும், இயற்கைவழி விவசாயம் காணப்படுகின்றது. இயற்கைவழி விவசாயத்தை மேம்படுத்துவதற்கென பல தன்னார்வ அமைப்புக்கள் வெவ்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற போதிலும், இரசாயன முறைகளுக்கு பழக்கப்பட்ட விவசாயிகள் அதன் அதி வினைத்திறனுக்கு பழக்கப்பட்ட விவசாயிகள், அதனைவிட்டு வெளியே வரவும், இயற்கைவழி தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொள்வதிலும் தயக்கம் காட்டுகின்றமை வருந்தத்தக்கதாகும்.

இரண்டாம் உலகப்போர் முடிந்த நிலையில் மிக அதிகளவில் வெடிமருந்தாகப் பயன்படுத்தப்பட்ட அமோனியா நைட்ரேட் உப்பை என்ன செய்வதென்று தெரியாமல் அதனை ஆராய்ச்சி செய்தபோது நைட்ரேட் போட்ட இடத்தில் பயிர் நன்றாக வளர்வதைப் பார்த்து அதை வளரும் நாடுகளில் விவசாயிகளுக்கு விற்று அதிக இலாபம் பெறலாம் எனும் நோக்கில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு உயர் விளைச்சல் இரகங்களை அறிமுகப்படுத்தி அதன் வளர்ச்சிக்கு நைட்ரேட் உபயோகப்படுத்தவென அறிமுகம் செய்யப்படும். பசுமைப்புரட்சி என்ற பெயரிலேயெதான் இவ் இரசாயப்பாவனை விவசாயத்திற்குள் ஊடுற்றது. “மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்லென்று யானைகட்டி போரடித்த” எனும் பெரும் சொற்களை உரித்தாக்கிய நம் பாரம்பரிய விவசாயம் உயர்விளைச்சல் ரகங்கள் என்ற பெயரில் மண்ணையும், மனிதனையும் மலடாக்கும் பணிகள் செயற்படுத்தப் பட்டது. பாரிய சூழலியல் சவால்களைத் தன்னகத்தே கொண்டுள்ள விவசாயம் பல புதுமாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளபோதிலும், உலகச் சனத்தொகைப் பெருக்கம் வர்க்கப் பெருக்கங்களாக ($2\times2=4\times4=16$) என்றவாறு அபரிதமாக அதிகரித்து வருகையில் விவசாய

உற்பத்தியானது வெறுமனேயே எண்கூட்டல் தொகையாக (2+2=4+2=6+2=8) என்றவாறாக அமைவதாகக் கூறப்படுகின்றது. இதிலிருந்து இரண்டாம் பசுமைப்புரட்சி நடக்க வேண்டும் என்ற எடுகோள் ஏற்பட்டிருக்கின்றது. அதாவது முதலாவது பசுமைப்புரட்சியுடன் ஒப்பிடுகையில் சனத்தொகை அதிகரித்திருப்பதாலும், விவசாயத்தைத் தொழிலாகச் செய்து வருபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாலும், விளைநிலங்கள் எல்லாம் வீட்டுமனைகளாக மாறுகின்ற அபாய சூழல் ஏற்படுவதாலும், மக்கள் தொகைக்கேற்றவாறான உணவை உற்பத்தி செய்ய வேண்டுமானால், உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறவேண்டியதன் அவசியத்தை இன்னொரு பசுமைப்புரட்சி ஏற்பட வேண்டியிருக்கிறது. இதற்கென இரசாயன உரப்பாவனை மட்டுமல்லாது, உயிரியல் தொழில்நுட்பங்கள், நனோ தொழில்நுட்பங்கள் என்பன பயன்படுத்தப்பட்டு உயர் விளைச்சல் பெறப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இப்படியான விவசாயத்துறையின் அடுத்தகட்ட நகர்வென்பதை சூழலியல் சார்ந்த கரிசனையுடன் அணுக வேண்டியதும் காலப் பொறுப்பாகும். நிச்சயமாக முதல் பசுமைப்புரட்சியினால் எமது சூழலியல் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகி இருப்பது மறுக்கமுடியாதது. எனவே இன்னொரு பசுமைப்புரட்சியினை அதேயளவான சூழல்தாக்கங்களுடன் செயற்படுத்துவதென்பது "தன்கையால் தானே மண் அள்ளிப்-போடல்" போன்றவாறாக அமைவதான செயற்பாடாகிவிடும். எனவே நிச்சயமாக விவசாயத்துறையின் அடுத்தகட்ட பரிமாண நகர்வென்பது சூழலுடன் நட்புரிமையான ஒன்றாகவே காணப்பட வேண்டும். நிச்சயமாக தற்போது உணவுத் தொழில்நுட்பத்தில் பயன்பட ஆரம்பித்திருக்கும் உயிர் தொழில்நுட்பம், நனோ தொழில்நுட்பம் என்பன சூழலுக்கு மிகவும் நேயமானவையாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எனது நாடும் நேர்ச்சிந்தனையோடு இத்தொழில்நுட்பங்களை விவசாயத்தினுள் பயன்படுத்திப் பார்க்க முடியும்.



வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் காலம் தவறிய மழை, வெள்ளம், பயிர் நோய்கள் ஆகியவை விவசாயிகளை முடங்கச் செய்கின்றன. அடிக்கடி ஏற்படும் வரட்சியும் காலம் தவறிப் பெய்கின்ற மழைகளும், பெரும் அழிவை ஏற்படுத்துகின்றவை. சில விவசாயக் கோட்பாளர்கள் இறக்குமதியை ஓர் தீர்வுத்திட்டமாக முன்மொழிகின்றமையானது விவசாயத்தில் தங்கியுள்ள பெரும்பாலான மக்கள் தொகையைப் பாதிப்படையச் செய்யும். விவசாய அபிவிருத்திக்கென தொலைநோக்கான பார்வை அவசியமான தொன்றாகும். அத்தோடு அரசாங்கத்தின் விவசாயத்துறை சார்ந்த முதலீடுகள் போதியவை இன்மையும், எமது பகுதி விவசாயிகள் பாதிப்புறுவதற்கு ஓர் பிரதான காரணமாகும். 1960கள், 1970களில் யாழ்ப்பாணம், மிளகாய் மற்றும் வெங்காயம் உட்பட காசுப்பயிர்கள் செழிப்பை அனுபவித்து தனது வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்பியதாக கூறப்படுகின்றது. இக்கூற்றைச் சில விவசாயக் கோட்பாளர்கள் அக்காலப்பகுதியில் காணப்பட்ட விவசாயக் கொள்கைகளின் விளைவு எனக் குறிப்பிட்டுள்ளனர். உண்மையில் அக்காலத்தில் காணப்பட்ட ஐக்கிய முன்னணி அரசாங்கம் இறக்குமதிகளை தடைவிதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் அத்தோற்றப்பாடு ஏன் யாழ்ப்பாண விவசாயிகளின் பொருளாதார எழுச்சிக்கு மட்டும் வழிகோலியது?

ஆராய்வோம்...

த.விதுர்ஷன்.
மாணவன் ,
கொழும்பு பல்கலைக்கழகம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | 2 | | | 3 |
| 4 | | | 5 | | | | |
| | | | | | 6 | | |
| 7 | | | | | | | |
| | | | | 8 | | 9 | |
| 10 | | | 11 | | 12 | | |
| | | | | | | | |
| | 13 | | | | 14 | | |

# குறுக்கெழுத்துப்போட்டி 16

**அனுப்ப வேண்டிய.....**

இறுதித்திகதி :- 25.02.2021
முகவரி :-
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

## இடமிருந்து வலம்

01- சிவனின் கையில் இருக்கும் ஆயதம்
02- பாலை நிலத்தெய்வம்
04- போக்குவரத்திற்கு உதவுவது
05- நாட்டின் எதிர்ச்சொல்
06- நெருப்பு
07- போர்த்துக்கல் நாட்டின் தலைநகரம்
09- நிறையுணவு
10- நாட்டிய சாஸ்திரம் எனும் நூலை எழுதியவர்
13- செல்வம்
14- பழைய வீடுகளின் முன்புறம் அமைக்கப்படுவது

## மேலிருந்து கீழ்

01- மாறுவேடம்
02- வழங்கு
03- யாழ்ப்பாண வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் இலக்கியங்களில் ஒன்று
04- வடமாகாணத்தின் முதலாவது பாடசாலை நிறுவப்பட்ட இடம்
05- மன்மதன்
08- பழம்
09- உலகம்
11- சுளகு
12- பாண்டியர்களின் மறுபெயர்களுள் ஒன்று
13- இது உள்ள பொருட்களுக்கே சந்தையில் கேள்வி அதிகம் (குழம்பி)

## குறுக்கெழுத்துப்போட்டி - 15

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 க | 2 பா | ட | பு | 3 ர | ம் | | 4 பொ |
| 5 த | வி | டு | | 6 தி | தி | | ல |
| வு | | | 7 ப | க | ல | வ | ன் |
| | 8 தே | 9 ச | ம் | | 10 வு | க | ன |
| 11 ஆ | ர | ம் | ப | ம் | | 12 ஆ | று |
| | | பா | ர | 13 கொ | ற் | ற | வை |
| 14 க | | ச | ம் | ள் | | | |
| ரு | | னை | | 15 கை | த் | த | டி |




வருடந்தோறும் பெப்பிரவரி மாதம் 21 ஆந் திகதியில் இத்தினம் கொண்டாடப்படுகின்றது. யுனெஸ்கோ நிறுவனம் 1999.11.17 அன்று பெப்பிரவரி-21 ஆந் திகதியை உலக தாய்மொழி நாளாகப் பிரகனப்படுத்தியதுடன் முதன் முறையாக 2000 ஆம் ஆண்டு உலக தாய்மொழி நாள் கொண்டாடப்பப்பட்டது. 20 வருடங்களாக உலக தாய்மொழி நாள் கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தாய்மொழியைப் பற்றியும் பண்பாட்டுப் பல்வகைமையைப் பற்றியும் பன்மொழிகள் பற்றியும் ஒரு விழிப்புணர்வை உலகம் முழுவதும் ஏற்படுத்துவதே இந்நாள் கொண்டாடப்படுவதன் நோக்கமாகும். “கல்வியிலும் சமூகத்திலும் உள்வாங்கப்படும் வண்ணம் பன்மொழிக் கொள்கையை மேம்படுத்தல்” **(Fostering multilingualism for inclusion in education and society)** என்பதே இவ்வாண்டின் (2021) தாய்மொழி நாளுக்கான தொனிப்பொருளாகும்.

உலக தாய் மொழிநாள் உருவான பின்னணி யாதெனில், 1952 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 21 ஆந் திகதி வங்களா தேசத்தில் நடந்த போராட்டப் பேரணி ஒன்றில் வைத்து நான்கு மாணவர்கள் கொலை செய்யப்பட்டனர். அவர்கள் வங்காளி மொழிக்கும் உருது மொழிக்குமிடையே உண்டான சர்ச்சை குறித்தே அப்போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். படுமோசமான இச்சம்பவத்தினால் முழு உலகும் நெகிழ்வுற்றிருந்தது. இதனடியாகவே யுனெஸ்கோ நிறுவனம் 1999 ஆம் ஆண்டு இந்நாளைத் தாய்மொழி நாள் என்று பறைசாற்றியது. மேலும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 2008 ஆம் ஆண்டினை “சர்வதேச மொழி ஆண்டு” **(International year of languages)** எனப் பிரகடனம் செய்ததோடு 2019 ஆம் ஆண்டினை “சுதேச மொழிகள் ஆண்டு” **(The year of indigenous languages)** எனவும் பிரகடனம் செய்தது.

உலக தாய்மொழி நாள் கொண்டாடப்படுவதன் அவசியம்தான் என்ன என்று ஆராய்கையில், உலகமயமாதல் செயன்முறை மூலமாகப் பல்வேறு மொழிகள் இல்லாதொழியும் அபாயம் காணப்படுவதால், அத்தகைய மொழிகளையும் அவைதம் பண்பாடுகளையும் பேணிப் பாதுகாப்பது கடினமான ஒரு விடயமாக இருப்பது புலப்படுகின்றது. அவ்வாறு 6000 மொழிகள் அருகி வருகின்றன. இது உலகில் பேசப்படும் மொழிகளில் 43% என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இரு வாரங்களுக்கு ஒரு மொழி என்னும் வகையில் இம்மொழிகள் முற்றாக அழிந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் பண்பாடுகளும் புலமைகளும் கூட அவற்றுடன் சேர்ந்து மடிந்து விடுகின்றன.




உலகில் 40% ஆனோர் தமது சொந்த மொழியில் கல்வியைப் பெற வாய்ப்பற்றோராகவே உள்ளனர். இருப்பினும் தாய்மொழி மூலம் அமைந்த கல்வியின் முக்கியத்துவத்தை விளங்கி அக் கல்வியை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக பாடசாலைக் குழந்தைகளுக்கான ஆரம்பக்

கல்வியை நோக்கியே இது அமைய வேண்டும். அதுவே பரந்துபட்ட சமூக வாழ்க்கையின் விருத்திக்கு அவர்களுக்குத் துணை நல்குகின்றது.

பன்மொழிகளும் பல்பண்பாடும் கொண்ட சமூகங்கள், தத்தம் மொழினூடாகவே வழி வழியாக தாம் பெற்றுவந்த அறிவையும் பண்பாடுகளையும் வெளிப்படுத்தியும் பாதுகாத்தும் வருகின்றன. அதுவே நின்று நிலைக்கும் தன்மை வாய்ந்தது.

எனவே, இத்தகைய மொழிகள் மறக்கடிக்கப்படாமல் இருக்கவும் அவைதம் பண்பாடு, பாரம்பரியம், தேசத்தின் திடமான வரலாறு போன்றனவற்றைப் பேணிக்காக்கவும் உலக தாய்மொழி நாள் உறுதுணை புரிகின்றது. நாம் நமது தாய்மொழியைப் பெருமையாகக் கருத வேண்டும் என்பதுடன் அம் மொழியைத் திறன்பட வாசிக்கவும், எழுதவும், பேசவும், செவிமடுக்கவும், அறியவும் முயற்சி எடுத்தல் வேண்டும்.

தென்னாபிரிக்காவின் புகழ் பெற்ற முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா தாய்மொழி பற்றிப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.
"ஒருவர் புரிந்துகொள்ளத்தக்க மொழியொன்றில் அவரிடம் கதைக்கும் பொழுது அக்கதை அவரின் தலையில் மாத்திரமே ஏறுகின்றது மாறாக, அவரின் தாய்மொழியில் அவரிடம் கதைக்கும் பொழுது அக்கதை அவரின் மனதிலேயே ஏறுகின்றது". என்னதான் வேற்று மொழியில் உரையாடினாலும் சொந்த மொழியில் உரையாடும் உணர்வுதான் தனிச்சிறப்புடையது என்பதனையே அவரின் கருத்து புலப்படுத்துகின்றது. அதுவே உண்மை. அதுவே கதைக்கின்ற கதைக்கு உள்ளபடி உயிரோட்டத்தைக் கொடுக்க வல்லது.

எமது தாய்மொழி தமிழ். இது திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மூத்த மொழியாகும். திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய மொழிகளும் தமிழிலிருந்தே பிறந்தன. தமிழ் மொழி ஐயாயிரம் வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட, பழைமை வாய்ந்ததொரு தொன்மையான மொழி. இதனை வைத்துப் பெருமை கொள்வதா? அல்லது அப்பெருமையைக் கட்டிக்காப்பதா? என்பது இன்று தமிழ்கூறும் நல்லுலகில் மீள்பரிசீலனை செய்யத்தக்க ஒரு முக்கியமான விடயமாகும். அத்தகைய ஒரு கட்டத்தைத் தமிழ்கூறும் நல்லுலகு எதிர்நோக்கியும் உள்ளது வெளிப்படை. ஏனெனில் தமிழின் இயல்பான நடை அல்லது இயற்கையான பாணி மெல்ல மெல்லக் கதியற்றுச் செல்லும் அவலம் அரங்கேறியுள்ளது. தமிழைத் தாய்மொழியாகப் பேசுவோரே தமிழைக் கொல்லவும், பிறமொழி ஊடுருவல்களாலமைந்த செயற்கை மொழிக் கையாட்சியைப் புகுத்தவும் தலைப்பட்டுள்ளனர். உறுப்பமைந்த எழுத்துகளிலிருந்தும், இலக்கண முறைகளிலிருந்தும், இயற்கை நடையிலிருந்தும், நேரிய வழக்குகளிலிருந்தும் விடுபட்டு, எங்கெங்கோ இரவல் பெற்ற மாற்றான் தாய் வழக்குகளுக்குச் செயற்கைச் செழுமையூட்டி, புழக்கத்திலும் பழக்கத்திலும் தமிழ் கதியற்றுத் தவிக்கின்றது.

இதனையே பாரதியார் "மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்" என்று கூறியிருப்பார் போலும் என்றெண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் தமிழரே தமிழ் வளர்க்க முன்வரமாட்டர் என்று தனது பட்டறிவின் மூலம் அவர் அன்றே கணித்துவிட்டார்.



எமது மூதாதையர் செய்த அரிய சாதனைகளான அறநூல்கள், காப்பியங்கள், காவியங்கள், இலக்கியங்கள் போன்றவற்றை இயற்றமுற்படாது போனாலும், அவர்களின் வழிவந்த மொழிப் பாவனையையாவது நாம் கட்டிக்காத்தல் அவசியமல்லவா? அவர்கள் இலக்கியம் படைத்து எமது மொழியின் வரலாற்று இருப்புக்குச் சான்று வழங்கினர். நாம் அதன் அழகையாவது கெடுக்காமல் இருப்பதுதானே தகுந்த கைமாறு.

இன்றைய சூழலில் தமிழை எழுதும்போது மேற்கொள்ளப்படும் குறைபாடுகள் அல்லது பிழைகள் ஒரு சிலவற்றைக் கீழே எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுகின்றேன். அப் பிழைகளின் சீரான தமிழ் வடிவங்களும் காட்டப்படுகின்றன.

அனைவர்களும் (X)
அனைவரும் (✓)

கனமழை (X)
பலத்த மழை (✓)

சமூக இடைவெளி (X)
ஆளிடைவெளி (✓)

இனச் சுத்திகரிப்பு (X)
இனக் களைவு (✓)

மூளைச் சலவை (X)
கருத்துத் திணிப்பு (✓)

குரலற்றவர்களின் குரல் (X)
ஆதரவற்றோருக்கான குரல் (✓)

பல வகையான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. (X)
....மேற்கொள்ளப்படுகின்றன. (✓)

ஒரு நிகழ்ச்சிக்கான தயாரிப்பு (X)
..... ஆயத்தப்படுத்தல் / ஒழுங்குபடுத்தல் (✓)

காட்டு விலங்குகளின் அச்சம் காரணமாக நாங்கள் வெளியேறினோம். (X)
நாங்கள் காட்டு விலங்குகளுக்கு அஞ்சி வெளியேறினோம். (✓)

கொவிட்-19 இற்குச் சாதகமாகப் பரிசோதனை செய்துள்ளார். (X)
கொவிட்-19 தொற்றியிருப்பது பரிசோதனையில் தெரிய வந்தது. (✓)

இந்தியாவினால் இலங்கைக்கு நன்கொடையாக கொரோனா தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (X)
இந்தியா கொரோனா தடுப்பூசிகளை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (✓)

மேற்குறிப்பிட்டவை சொற்களிலும் வசனங்களிலும் காணப்படும் குறைபாடுகளே. அதைவிடுத்து, இன்று பல்லூடகங்கள் வாயிலாகக் காணக்கிடைக்கின்ற எழுத்துப் பிழைகளோ எண்ணிலடங்காதவை. ஒவ்வொருவரும் தனித்தனியே தன்பாட்டில் தான் எழுதுவது எல்லாம் சரிதான் என்றெண்ணி எழுதுவதே இப்பிழைகள் வரக் காரணமாகின்றன. ஆங்கிலத்தில் பிழைவிட்டால் எங்கே மாட்டிக்கொள்வோமோ? என்ற எண்ணத்தில் கண்ணுங்கருத்துமாகப் பிழைகளேதும் இன்றி ஆங்கிலத்தை எழுதுவதில் கவனம் செலுத்தும் நாங்கள், அதே சிந்தனையுடன் தமிழை எழுத ஏனோ அலட்சியம் செய்கின்றோம். இதனால் பாதிப்படைவது தமிழ் மாத்திரமல்ல் தமிழ் மொழியை அரிச்சுவடி முதற்கொண்டு எழுத்துக் கூட்டி வாசிக்கப் பழகும் பருவத்திலுள்ள எமது எதிர்காலத் தமிழ் பேசும் குழந்தைகளும் தான். அவர்களே நாளைய தமிழறிஞர்கள், பண்டிதர்கள், எழுத்தாளர்கள். அவர்கள் ஒருபோதும் பிழையாக வழிநடத்தப்படலாகாது.

இத்தகைய பிழைகள் ஏற்படக் காரணங்கள் பல உள்ளன. அவற்றில் மிக முக்கியமான மூன்று விடயங்களாக ஊடகங்கள், நவீன தட்டச்சு முறைகள், ஆங்கில மொழிச் செல்வாக்கு என்பன காணப்படுகின்றன.

ஊடகங்கள் கல்வி கற்கும் பிள்ளைகள் முதல் சமூகத்தின் பல மட்டத்திலுள்ளோர் வரை அனைவரும் தொடர்புறும் ஒரு முக்கிய சாதனமாகும். அவை எழுத்து ஊடகமாக இருந்தாலும் ஒலி, ஒளி ஊடகமாக இருந்தாலும் அவற்றின் மூலம் பயன்படுத்தப்படும் சொற்கள், வசனங்கள், கருத்துகள் போன்றவை மூலம் மக்கள் கற்கின்றனர். இத்தகைய கற்பித்தலை எக்காலமும் எந்நேரமும் வழங்கும் ஊடகங்கள் மிகத் திறன்பட தமிழ் மொழியைப் பிரயோகிப்பதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

ஆங்கில மொழியின் பல்கிப் பெருகிய செல்வாக்கும் புதிய நவீன கலைச்சொற்கள் ஆங்கில மொழி வழியாகவே எமக்குக் கிடைப்பதாலும், அச் சொற்களின் அல்லது சொற்றொடர்களின் அல்லது வசனங்களின் பொருள்களைச் சொல்லுக்குச் சொல்லாக மொழிபெயர்த்துப் பொருள் கொள்வதை விடுத்து, தமிழின் இயல்பான நடையைக் கருத்திற் கொண்டு நேரிய பொருள் கொள்வதே ஏற்புடையது. மேலே காட்டிய எடுத்துக்காட்டுகளுள் சில ஆங்கில வழியமைந்த செயற்கைத் தமிழ் மொழியாகும்.

இன்றைய தொழிநுட்ப வளர்ச்சி காரணமாகப் பல்வேறு வடிவிலான தமிழ் தட்டச்சுக் கருவிகள் கைப்பேசிகளிலும், கணினிகளிலும் புகுத்தப்பட்டுள்ளன. அவற்றைக் கையாளும் போது எழுத்துப் பிழைகள் அதிகமாக ஏற்படுவது இயல்பான ஒரு விடயம். எனவே அவற்றைப் பயன்படுத்தி எழுதும் வேளைகளில் எழுதப்படும் கருத்தில் கவனம் செலுத்தினாலும், எழுதி முடித்த பின்னர் எழுத்திலும் கவனம் செலுத்தி ஒருமுறை, இருமுறை மீள்வாசிப்பு செய்தே பதிவிட வேண்டும் அல்லது பதிப்பிக்க வேண்டும்.

வாழும் மொழி என்றால் என்ன என்ற கேள்விக்கு விடையாக, எம்மொழி புதுமைகளை ஏற்று தனது தனித்துவத்திலிருந்தும் நழுவாது திடமாக நடை போடுகிறதோ அதுவே வாழும் மொழியாகும் என்று கொள்ளப்படுகின்றது. இச்சிறப்பியல்பு தமிழுக்கு என்றென்றும் கைகூடி வருகின்றது. புதியன புகுதல் என்பது நவீன யுகத்தின் தொடக்கத்திலிருந்தே தமிழில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தச் செயன்முறையில் பாரிய பங்கேற்பது மொழிபெயர்ப்புகள் எனலாம். பிற மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட புலமைகள் தமிழில் சொரிந்து கிடக்கின்றன. இது பாரதியாரின் பேரெதிர்பார்ப்புமாகும். தமிழின் தொன்மையான வரலாற்றினடியாகவும் புதியன ஏற்றல் பண்பின் காரணமாகவும் தமிழுக்கு “செம்மொழி” என்ற புகழ் சூட்டப்பட்டது.

இன்றைய சூழலில் தமிழ் மொழியின் தன்மையையும் அதன் நேரிய வழக்கையும் பேணிக் காப்பதே தமிழராகிய நாம் தமிழுக்குச் செய்ய வேண்டிய மிக முக்கிய பணியாகக் கருதப்படுகின்றது. அத்தகைய “மொழிப் பிறழ்வு” தான் தற்போது தமிழ் மொழி சந்தித்துள்ள நெருக்கடியான நிலையாகவும் பார்க்கப்படுகின்றது. அதனைச் சீர் செய்வதற்கு மிக முக்கியமான கருவி வாசிப்புப் பழக்கமாகும். வாசிப்பு யாரிடம் ஒரு வழக்கமான செயற்பாடாக உள்ளதோ, அவர்தான் மொழியிலும் சிறந்து விளங்குவார். அவரால் தான் சரியான உபயோகம் எது பிழையான உபயோகம் எது என்பதைப் பிரித்தறிய முடியும். வெறுமனே கேட்பதையும் பார்ப்பதையும் வைத்துக் கொண்டு இதுதான் செம்மொழி என்று மார்தட்டிக் கொள்வதில் எவ்வித நலனும் தமிழுக்குக் கிடைக்கப் போவதில்லை தமிழ் பேசும் மக்களுக்கும் கிடைக்கப்போவதில்லை. தமிழை அறிவதை

விடுத்து தமிழைக் கற்கும் முயற்சியிலும் நாம் ஈடுபடவேண்டும். வாசிக்கும் போதோ எழுதும் போதோ பயன்படுத்தப்படுகின்ற உபயோகங்கள் சரியானவையா? பிழையானவையா? என்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அச்சந்தர்ப்பங்களில் எழும் சந்தேகங்களை மொழியில் கைதேர்ந்தவர்களிடம் கேட்டறிந்து கற்க வேண்டும்.

தமிழ் மொழியைக் காக்கும் உணர்வின்றித் தமிழன் என்று நாம் பெருமை கொள்வதில் எவ்வித உண்மையும் இருக்கப்போவதில்லை. எம்மொழி செம்மொழி என்றால் எம் மொழி செம்மொழி என்று நெஞ்சை நிமிர்த்திப் பறைசாற்றும் உணர்வும் ஊக்கமும் நம் கைகளிலேயே உள்ளன. அத்தகைய ஒரு சீர்மையை மொழியில் பேணுவதே எம் தாய்மொழி தமிழ் மீது நாம் கொண்ட பற்றுறுதியும் அதனைக் காக்க நாம் செய்யும் முயற்சியும் ஆகும். இதனையே உலக தாய்மொழி நாள் வேண்டி நிற்கின்றது.

“உலகத்திலே அமைதியை ஏற்படுத்த இனி இல்லையென்ற உச்ச ஆயுதம் மொழியாகும்”. -நொவாம் கொம்ஸ்கி-

எம்.ஆர்.றிப்அத் முகம்மது B.A (Hons)
சத்தியம் செய்த மொழிபெயர்ப்பாளர்

# உயிரின் ஓலக்குரல்

காலத்தை அளவிட்ட
நினைவுச் சுவடுகளவை
நிச்சயம் தெரியும்
நித்தியம் வாழ்பவையென்று ... !

இருட்டில் சிரிக்கும் அல்லியாய்
இனிய அந்த
மாலைப் பொழுதுகள் !
தெளிவற்ற இருள்சூழ்
தருணங்கள் !
இதமான இசையில்
இதயம் நகர்ந்த நாட்கள் !
என,
அத்தனையும்
துணிச்சலாய் வரவேற்ற
அந்த இரவுப் பொழுதுகள் !
இன்னும்
நினைவிருக்கிறது ...

மீண்டும் ஒருமுறை,
இதயத்தில்
கனன்றுகொண்டிருக்கும்
இந்த
இரகசிய ரணங்களை
இனிதே மறைக்க
இதமான மெல்லிசை
இதயத்தில் மருந்தாக ..... !

நீண்டகால
தேய்பிறையினின்று
மீண்டுமென்
வாழ்வியற் படலத்தை
மீளாரம்பம் செய்தபோது
திடீரென தீப்பொறியொன்று-என்
சிந்தையில் சிரித்து சென்றது ....

“ஆம்,
நெருக்கியமிழ்த்தும்
வலிகளை
நெருங்கிச்சென்று
சொல்லி விட
உறங்கும் உன்னிரவில்
உனக்கென்றோர்
உறவு வேண்டுமென்று...”



ஆங்கிலத்தில்:
பெருகு இராமகிருஷ்ணா

தமிழாக்கம்:
மிதுஷா செல்வராஜா
மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறை
யாழ் பல்கலைக்கழகம்.

# இணுவில் பிரீமியர் லீக்கின் இலக்கு அடையப்பட்டதா?

த.மதுஜனன்

சைவமும் தமிழும் தளைத்து ஓங்கும் இணுவையம்பதியின், துடுப்பாட்ட இரசிகர்களின் பெரும் வரவேற்பை பெற்ற இணுவில் பிரிமியர் லீக் **(IPL)** தொடரின் முதலாவது பருவகாலம் இனிதே நிறைவேறியது. இந்தியாவின் இந்தியன் பிரிமியர் லீக் - **IPL** தொடருக்கு நிகராக இணுவில் வாழ் இளைஞர்கள் ஏழு அணியாக பிரிந்து, ஏலம் முறையிலே வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இத்தொடரில் 165 வீரர்கள் பதிவை மேற்கொண்டதுடன் 105 வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டு போட்டிகள் இனிதே ஆடப்பட்டன.




இப்போட்டி தொடர் தனது இலக்கை எட்டியதா? என்றால் ஆம்! என்றே பதில் அளிக்க வேண்டும். வெற்றி - தோல்விக்கு அப்பால் இப்போட்டித்தொடர் 105 வீரர்களை ஒரே களத்தில் இணைத்துள்ளது. இது பெரும் வெற்றியே. அத்துடன் 2015இற்கு முன்னைய காலப்பகுதியில் இணுவில் மத்திய கல்லூரி மைதானம் விடுமுறை காலங்களிலும் மாலை நேரங்களிலும் இளைஞர்களால் நிறைந்து காணப்படும். ஆனால் 2015இற்கு பிறகு அவ்வாறான காட்சியை பெரிதாக காண முடியாமல் போய் உள்ளது. மைதானம் ஓய்வின்றி ஆர்ப்பரித்தது முன்னைய காலங்களில். அதிகாலையில் 6.00மணிக்கு சென்று மைதானத்தில் “எமக்கு **Match** இருக்கிறது” என அடையாளம் இட்ட காலம். அத்துடன் ஒரே நேரத்தில் மைதான கடையிலும் நடுவிலும் விளையாடிய காலம். இவை எல்லாம் காணாமல் போன நிலையில் இந்த இணுவில் பிரிமியர் லீக் தொடர் போட்டி இடம்பெற்று நான்கு நாட்களும் 2015ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னைய காலம் போல் மைதானம் காணப்பட்டது. இதுவும் இணுவில் பிரிமியர் லீக் கண்ட வெற்றியே ஆகும்.

அடுத்து, மகனின் விளையாட்டை காண தந்தை தம்பியின் விளையாட்டை காண அண்ணன் என ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் மைதானத்தில் நிறைந்து இருந்தமை வெற்றியே!

அடுத்து 2015ஆம் ஆண்டுக்கு முன்னைய காலப்பகுதியில் தொடர்ச்சியாக குளக்கரை மைதானத்தில் ஆர்ப்பரித்த குரல்கள் பல மீண்டும் குளக்கரை மைதானத்தில் ஆர்ப்பரித்தன. ஒரு வீரன் தன்னுடைய அனுபவத்தை பகிரும் பொழுது கூறினார். “தான் எட்டு வருடங்களின் பின்னர் துடுப்பு மட்டையை பிடிக்கிறேன்” என்று இவ்வாறு பல வீரர்கள், பல நண்பர்களை இணுவில் குளக்கரை விளையாட்டு மைதானத்தோடு ஒன்றிணைத்து இணுவில் பிரிமியர் லீக் தொடர் கிண்ணம்.

போராடும் மனநிலை, தோல்வியை ஏற்கும் மனநிலை, தோல்விக்கு பின்னால் உள்ள காரணங்களை ஆராய்தல், புதிய திட்டங்களை வகுத்தல் என ஒரு மனிதனுக்க தேவையான சமூக அறிவு விளையாட்டின் மூலமே பெற்று கொள்ள முடியும். அத்துடன் இன்றைய




சமூகத்தில் அந்தஸ்து, கல்வி மட்டம், பிரதேச வேறுபாடு என பல பிரிவுகளாக நாம் பிளவுபட்டு உள்ளோம் யாவற்றையும் விளையாட்டு களைந்து விடுகின்றது. இவ் அனுகூலங்களை இணுவில் பிரிமியர் லீக் தொடரும் செவ்வனவே நிறைவேற்றியுள்ளது. ஒரு கிண்ணத்திற்கு விரிவுரையாளர், ஆசிரியர், பொறியியலாளர், மாணவர்கள், சாதாரண நபர் என அனைவரும் முயற்சித்தது இத்தொடரின் வெற்றியாகவே அமைகிறது.

பலருக்கு களம் அமைத்து கொடுக்கப்பட்டது. பலருக்கு இலக்கம் உடைய சீருடை அணிந்து கிரிக்கெட் விளையாட வேண்டும் என்ற கனவு நிறைவேறியது. புதிய அத்திவாரம் இடப்பட்டது. இளைஞர் ஒற்றுமைகள் களத்தில் நிரூபணமாகியது. இதுவெல்லாம் விளையாட்டால் முடியும் என்பதை இணுவில் பிரிமியர் லீக் தொடரும் நிரூபித்துள்ளது. அத்துடன் இன்று இளம் சமூகத்தை ஆட்டிப்படைக்கின்ற முக்கிய விடையமாக காணொளி, இணைய விளையாட்டுக்கள் காணப்படுகிறது. இக்காணொளி, இணைய விளையாட்டானது இளம் சமூகத்தின் மத்தியிலே மனஅழுத்தம், பதகளிப்பு, மனச்சோர்வு போன்ற உளரீதியான பிரச்சினைகளுடன் நித்திரைக்குழப்பம், கண்வலி, வன்போக்கு நடத்தை போன்ற




பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கு காரணமாய் அமையும். ஆனால் மைதானத்தில் விளையாடுகின்ற பொழுது அது மனமகிழ்ச்சி ஆரோக்கியமான நித்திரை, பசி, உற்சாகம் என்பவற்றை ஏற்படுத்தும் ஆரோக்கியமான இனளயோர் சமூகத்தை உருவாக்க உதவும். இவ்வாறான பல்வேறு சமூக மாற்றத்திற்கு அடி எடுத்து வைத்தது இணுவில் கலையொளி மன்றத்தால் நடாத்தப்பட்ட இணுவில் பிரீமியர் லீக் தொடர் ஆகும்.




இவ்வாறு அனைத்து கிராமங்களிலும் ஆரோக்கியமான சிந்தனையை வளர்க்க கூடிய இவ்வாறான போட்டித் தொடரை நடத்துவதன் மூலம் உடல், உள ஆரோக்கியம் உள்ள சமூகத்தை உருவாக்க முடியும் பல்வேறு சமூக பிரச்சினைக்கும் இது தீர்வாக அமையும்.

# மந்திர மெஸ்ஸி 5

தீரன்

இரண்டு வருடம் பார்சிலோனாவில் முகாமையாளராக இருந்த tito ஒரு ஸ்பெயின் சாம்பியன் பட்டத்தை மட்டும் வென்றார். ஆனால் பார்சிலோனா அணியின் கட்டமைப்பை நன்றாக உறுதிப்படுத்தினார்.

மெஸ்ஸியுடன் மிக நல்ல உறவை பேணிய அவர் 2 வருட முடிவில் புற்று நோய் காரணமாக உயிர் இழக்கும் தருவாயில் மெஸ்ஸியிடம் பார்சிலோனாவை விட்டு செல்லக் கூடாது என உறுதி மொழியை வாங்கினார். இன்று வரை எவ்வளவு பிரச்சனைகள் வந்தும் கொடுத்த வாக்கிற்காக அணியை விட்டு செல்லாமல் இருக்கிறார் மெஸ்ஸி.

அவருக்குப் பின் பல முகாமையாளர்கள் வந்தனர். அவற்றில் ஒருவரான luis enrique கீழ் மெஸ்ஸி மீண்டும் பிரகாசிக்க தொடங்குகிறார். புதிய நட்சத்திரங்களாக உருவெடுத்துக் கொண்டிருந்த neymar ,luis suaraz போன்ற சிறந்த வீரர்களுடன் இணைந்து மெஸ்ஸி ஆடினார். இவர்களுடன் சக வீரர்கள் என்பதையும் தாண்டிய நல்ல நட்பு இன்று வரை தொடர்கிறது.



ஏற்கனவே xavi, ineasta போன்ற சிறந்த வீரர்களுடன் காணப்பட்ட அணி புதிய வீரர்களின் இணைப்பினால் மேலும் வலுவாகி treadleஇனை வென்றது. 16 சீசன் இல் பார்சிலோனாவுக்கு விளையாடிய மெஸ்ஸி இதுவரை 641 கோல்களையும் 282 assist பெற்ற மெஸ்ஸி 34 கோப்பைகளையும் வென்று உள்ளார்.



அத்துடன் அவர் முன் இருந்த பல்வேறுபட்ட கழக சாதனைகளையும் முறியடித்து உள்ளார். அந்த சூழ்நிலையில் பார்சிலோனா நிர்வாகத்திற்கும் மெஸ்ஸிக்கும் நல்ல உறவு காணப்படவில்லை. அத்துடன் அணியின் செயற்பாடும் பிடிக்காமல் அணியை விட்டு வெளியேறப்போகிறேன் என்ற அறிவிப்பை 2020 ஆண்டில் வெளியிட்டார். அவரது contract படி அவர் கடந்த பருவ கால முடிவில் இலவசமாக எந்த அணியிலும் இணையலாம் என்றாலும் தற்போது காணப்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இது நடைபெறவில்லை. அவர் நினைத்து இருந்தால் நீதிமன்றம் சென்று இதை சாத்தியப்படுத்தி இருக்கலாம். ஆனால் தன்னை வளர்த்த அணியை அவமானப்படுத்த கூடாது என்று இன்று வரை அணியில் ஆடிக்கொண்டு இருக்கிறார்.

“சட்ட சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ள காரணத்தினால் நான் பார்சிலோனாவிலேயே இருக்க முடிவு செய்துள்ளேன். நான் சந்தோ‘ மாக இல்லாததால் அணியை விட்டு விலக முடிவு செய்தேன். ஆனால் சிறு வயதிலிருந்தே நான் விரும்பிய அணியை நீதிமன்றத்திற்கு அழைத்து செல்ல விரும்பாததால் இந்த முடிவை எடுத்துள்ளேன். அடுத்த சீசன் வரை பார்சிலோனாவிலேயே விளையாடுவேன்” என மெஸ்ஸி சொல்லியுள்ளார்.

***மெஸ்ஸியின் சர்வதேச அணி பயணம் பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்...***

